விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 21 செவ்வாய்க்கிழமை (04.04.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 106

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# இலங்கை வந்த புதிய சமாதானத்தூதுவர் கண்காணிப்புக் குழுத்தலைவருடன் சந்திப்பு

## நாளை விடுதலைப்புலிகளுடன் பேச்சு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கான நோர்வேயின் புதிய தூதுவர் ஜோன் ஹான்சன் பௌவர் நேற்று அதிகாலை இலங்கை வந்தார். நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்த அவர் நாளை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

அரச ,விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தும் பௌவர் நாளை மறுதினம் இலங்கை வரும் எரிக்சொல் ஹெய்மைச் சந்தித்து அச்சந்திப்புக்கள் குறித்து விளக்கவுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## தனி முஸ்லிம் படையணி தேவையில்லை அகில இலங்கை முஸ்லிம் சபை அறிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தில் தனி முஸ்லிம் படையணி தேவையில்லை என்று அகில இலங்கை முஸ்லிம் சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மகிந்த ராஜபக்ஷவுக்கு அந்த அமைப்பின் பொதுச்செயலாளர் எம். எப்.மொகைதீன் கடிதம் அனுப்பியுள்ளார்.

எமது அகில இலங்கை முஸ்லிம் சபையானது 1921 ஆம் ஆண்டு மறைந்த சேர் ராசிக் பரீத் அவர்களால் தொடங்கப்பட்டது. எமது முஸ்லிம் சமூகத்தின் பல்கலைக்கழக கல்விச் சமூகம், அரச மற்றும் தனியார்துறை தொழில் வல்லுநர்கள் ,வர்த்தகர்கள் அனைவருமே இராணுவத்தில் தனி முஸ்லிம் படையணி அமைக்கப்படுவதில் விருப்பமில்லாது இருக்கிறோம்.

கிழக்கு மாகாண முஸ்லிம்களை பாதுகாப்பதற்காக இந்த படையணி அமைக்கப் படும் என்று அரசாங்கம் கூறுகின்றது.

அனைத்து மாகாணங்களிலும் அனைத்து மதத்தவர்களுடன் முஸ்லிம் மக்கள் இணைந்தே வாழ்கின்றனர். எங்களுக்குத் தெரிந்த வரையில் எந்த வொரு நாட்டின் இராணுவத்திலும் தனி ஒரு இனத்திற்காக அல்லது சமூகத்திற்காக ஒரு படையணி உருவாக்கப்பட்டதில்லை.

பல்லின கலாசாரம் ,பல்லின மதங்கள் உள்ள நாட்டில் இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பானது இனங்களின் அடிப்படையில் இருக்கத்தேவையில்லை என்று அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (ச)

## பாராளுமன்றத்திற்கு தமிழ் எம்.பிக்கள் செல்வர்

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று நடைபெறவுள்ள பாராளுமன்றத் தொடரில் கலந்துகொள்வார்கள் என தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக இன்று காலை கூட்டமைப்பு எம்.பிக்கள் ஒன்று கூடி முடிவெடுப்பார்கள் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

ஜெனீவாவில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை நடைமுறைபடுத்தக்கோரியும் தமிழ் மக்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மூவின மக்களும் இணைந்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக்குழுவினரால் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரை விடுவிக்கக் கோரி வவுனியாவில் இன்று மூவின மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

கடந்த ஜனவரி 29,30 ஆம் திகதிகளில் கடத்தப்பட்ட புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை. அவர்களை பாதுகாப்பான முறையில் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என வலியுறுத்தி தமிழ், சிங்கள ,முஸ்லிம் முன்பள்ளிகளின் ஆசிரியர்கள்,மாணவர்கள் மற்றும் பெற்றோர் இவ் ஆர்ப்பாட்டத்தினை மேற்கொள்ளவுள்ளனர்.

அமைதியான முறையில் இவ் ஆர்ப்பாட்டத்தினை மேற்கொள்ளவுள்ளதாக முன் பள்ளி ஆசிரியர்கள் தெரிவித்தனர். (ச)

## ஓ.எல்.பெறுபேறு ஏப்.8இல் வெளியாகும்

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் 8ஆம் திகதி வெளியிடப்படுமென்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேர்தல் காரணங்களால் தாமதம் ஏற்பட்டிருந்த க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை முடிபுகளை முதலில் இணையத்தளத்தில் வெளியிடவுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த மார்ச் 27 ஆம் திகதி வெளியிடப்பட இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-9)

# மக்கள்மீது வன்முறைகள் தொடர்வதினால் இராணுவத்தை தாக்கத்திட்டமிட்டுள்ளோம்

## யாழ். பொங்கியெழும் மக்கள்படை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் மீதும் மாணவர்கள் மீதும் இராணுவத்தின் அட்டூழியங்கள் அதிகரித்துள்ளன. இதனை சர்வதேச சமூகமும் கண்காணிப்புக் குழுவும் நன்கு அறிந்துள்ளபோதும் அவர்களால் எதனையும் செய்ய முடியவில்லை.

இச் சந்தர்ப்பத்தில் மக்கள் மீதான தாக்குதலை இனியும் எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இந்நிலையில் எதிர்வரும் நாட்களில் இராணுவத்தினருக்கு எதிராக தாக்குதலை நடத்த நாம் திட்டமிட்டுள்ளளோம் என யாழ். மாவட்ட பொங்கி எழும் தமிழீழ மக்கள்படை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது,

அண்மைய நாட்களாக தமிழ் மக்களாகிய எம்மீது சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படைகள் தாக்குதல்களை மேற்கொண்டு எமது சகோதரர்களை படுகொலை செய்ததுடன் கைதுகளையும் மேற்கொண்டன.

இராணுவத்தினரின் இந்தச் செயல்களுக்கு எதிராக ஆத்திரமுற்ற மக்களாகிய நாம் வன்முறையில் ஈடுபட தூண்டப்பட்டோம். நாம் பொங்கியெழும் மக்கள் படையாக இராணுவத்திற்கெதிராக பல தாக்குதல்களை மேற்கொண்டு நூற்றுக்கணக்கான ஆக்கிரமிப்புப் படைகளை கொலை செய்ததன் ஊடாக சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படைகளை ஆட்டம் காணவைத்தோம்.

ஆத்திரமுற்ற ஆக்கிரமிப்புப் படைகள் செய்வதறியாது வீதியால் சென்றவர்களையும் மாணவர்களையும் கைது செய்தும், சுட்டும் தமது பயத்தை வெளிப்படுத்திய வேளை இலங்கைக்கான சமாதானத்தூதுவர் எரிக்சொல் ஹெய்மின் வருகை இடம்பெற்றது.

இதன் காரணமாக மீண்டும் ஒரு முறை ஜெனீவா நகரில் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு தமிழீழத் தேசியத் தலைவர் ஒப்புக் கொண்டார்.

முக்கியமாக புரிந்துணர்வு (11 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR

*your friend in the skies...*

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:

021 - 222 3891, 222 6297, 077 - 2349999,

011 - 2372952/3, 011 - 2360290/1

e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...




எக்ஸ்போ ஏயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வாழ்க்கையை நரகமாக்கும் மனச்சோர்வு

## மருத்துவ விளக்கம்

**விரக்தி, வெறுமை, தனிமை மகிழ்ச்சியின்மை, சோம்பல், ஊக்கமின்மை, எதிர்பார்ப்பின்மை முதலிய உளமாறுபாடுகளை ஏற்படுத்தும் மனச் சோர்வுக்கு உரிய காலத்தில் சிகிச்சை பெறப்படாவிட்டால் பிற்காலத்தில் பாரிய விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். மனச் சோர்வு உடையவர்களுக்கு இதய நோய், சலரோகம் என்பனவும் ஏற்படக்கூடும்.**

*கேள்வி:-*மனச்சோர்வு நோய் எவ்வாறு ஏற்படுகின்றது?

*பதில்:-* மூளையின் நரம்பிணைப்பில் சில பதார்த்தங்களின் செயற்பாடுகுறைவாக உள்ளபோது ஏற்படுகின்றது?



*கேள்வி:-* மனச்சோர்வு ஒருவரின் உடலியல் சார்ந்ததா? அல்லது சூழல் சார்ந்ததா?

*பதில்:-*ஒருவகை மனச் சோர்வு உடலியல் சார்ந்தது. அவர்கள் வாழ்க்கைக்காலம் முழுவதும் சதா கவலையுடன் இருப்பர். மறு வகை மனச்சோர்வு சூழல் சார்ந்தது பொதுவாக இழப்பின் அடிப்படையில் ஏற்படும்.

*கேள்வி:-* உடலியல் சார்ந்த மனச் சோர்வினை மாற்றமுடியுமா?

*பதில்:-* இவர்களுக்கு குறித்த காலத்திற்கு மருந்துகள் எடுப்பதால் குணப்படுத்தலாம்.

*கேள்வி:-* சூழல் சார்ந்த மனச் சோர்வினை மாற்ற முடியுமா?

*பதில்:-* ஆம் இவர்களுக்கு உளவளத்துணை மூலம் ஆற்றுப்படுத்துவதாலும் அறிவு சார்ந்த வழிமுறைகளைக் கூறுவதாலும் மாற்றலாம்.

*கேள்வி:-*மனச்சோர்வின் போது எண்ணத்தில் ஏற்படும் மாற்றங்கள் எவை?

*பதில்:-* ஏன் இந்த வாழ்க்கை செத்திடலாம் போல் இருக்கு , ஒரு பலனும் இல்லை என எண்ணு வர் தாழ்வு மனப்பாங்கு காணப்படும்.

*கேள்வி:-*மனச்சோர்வின் போது உணர்வில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?

*பதில்:-*விரக்தி, வெறுமை, தனிமை, சந்தோசமின்மை, சோம்பல், ஊக்கமின்மை, எதிர்பார்ப்பின்மை என்பன காணப்படும்.

*கேள்வி:-*மனச்சோர்வின் போது நடத்தையில் ஏற்படும் மாற்றங்கள் எவை?

*பதில்:-*மற்றவர்களுடன் சேர்வதில் விருப்பமின்மை ஒதுங்கி வாழ்வர், ஆடைகள் அணிதல், சுய கவனிப்பில் நாட்டம் இராது உணவு உண்பதில் நாட்டம் இராது அழுதல், கோபப்படல் காணப்படும் வேலைகளை ஒழுங்காகச் செய்ய மாட்டார்கள்.

*கேள்வி:-* மனச் சோர்வின் போது உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்படும் மாற்றங்கள் யாவை?

*பதில்:-*தொடர்ச்சியான களைப்பு, நித்திரைக் குழப்பம் ஏற்படும். மனச் சோர்வு உடையவர்களில் இதய நோய், சலரோகம் என்பன ஏற்படும் நிகழ்வுகூட.

*கேள்வி:-* மனச்சோர்விற்கான சிகிச்சைகள் எவை?

*பதில்:-* அதிகமாக பாதிக்கப்

**டாக்டர் சி.யமுனாநந்தா**

பட்டவர்களுக்கு மருந்துகள். மின் அதிர்ச்சி சிகிச்சை என்பன வழங்கப்படும். ஏனையவர் களுக்கு உளவளத்துணை, சுவாசப் பயிற்சிகள் என்பன வழங்கப்படும்.

*கேள்வி:-*மனச்சோர்வு ஏற்படக் கூடிய ஏனைய நோய் நிலைகள் யாவை?

*பதில்:-* தைரொட்சின் குறைபாடு, சலரோகம் போன்ற நோயுள்ளவர்கள் மனச்சோர்வடைய லாம். இவர்களிற்கு அந்நோய்களிற்கு சிகிச்சை அளிப்பதால் மனச்சோர்வினை கட்டுப்படுத்தலாம்.

# திண்மக் கழிவகற்றல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

திண்மக்கழிவகற்றல் மற்றும் நகரை சுத்தமாக வைத்திருப்பது தொடர்பான கருத்தரங்கு யாழ். மாநகர ஆணையாளர் சி.வீ. கே.சிவஞானம் தலைமையில் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில்கலந்துகொண்டவர்களின் சில முன் மொழிவு கள் ஏற்கப்பட்டு, அவை நடை முறைப் படுத்தப்படுவதெனவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அவை வருமாறு,

திண்மக் கழிவகற்றல் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில்ஏற்படுத்தஒருஅமைப்பை மாநகரசபை மட்டத்தில் உருவாக்கிக் கொள்ளல். திண்மக்கழிவுகளை பசளையாக்கி வீடுகளில் புதைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் இந்த அமைப்பின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை மேற்கொள்ளல்.

மற்றும் உணவகங்களில் லஞ்சீற் பாவனையை முற்றாகத் தடை செய்து அதற்குப் பதிலாக வாழை இலை, தாமரை இலை போன்றவற்றை பயன்படுத்தி சூழல் மாசு படாத வகையில் பாதுகாத்துக் கொள்ளல்.

துர்நாற்றம் வீசும் கழிவுகளை ஏற்றிச் செல்வதற்கு தனியான வாகனம் பயன்படுத்தல் அத்துடன் அக்கழிவுகளை உடனுக்குடன் எரித்துவிடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் என்பவற்றில் திண்மக்கழிவு சம்பந்தமான கருத்தரங்கை நடத்துதல், ஒலி பெருக்கி மூலம் இது தொடர்பான விழிப்புணர்வு பிரசாரத்தை மேற்கொள்ளல்.

வீதிகளிலும் ஏனைய இடங்களிலும் குப்பைகளை போடுவோர் மீது தண்டப்பணம் அறவிடும் நடவடிக்கையினை ஒவ்வொரு சுகாதார மேற்பார்வையாளர்களும் மேற்கொள்ளல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதேவேளை, யாழ்.நகரில் அதிகரித்துள்ள நுளம்புத் தொல்லையை நீக்குவதற்கு, குறிப்பிட்ட ஒருவார காலத்திற்கு நுளம்புக்கு மருந்து தெளிக்கும் நடவடிக்கை மேற்கொள்ள சுகாதார வைத்திய அதி காரி நடவடிக்கை மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத் தேநீர்க் கடைகளில் முழுமையான சுத்தம் சுகாதாரம் பேனப்படுவதில்லை இது பெரும் குறைபாடாகவுள்ளது. இதனை உடனடியாக நிவர்த்தி செய்ய யாழ்.சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. இக்கலந்துரையாடலில்கூறப்பட்டதிட்டங்கள்யாவும் இவ் வாரத்தில் இருந்து நடைமுறைக்கு வரும் எனவும் மாநகர ஆணையாளர்தெரிவித்தார். (க-132)

# இராசி பலன்

**04.04.2006**

**(பங்குனி 21, செவ்வாய்க்கிழமை)**

**சஷ்டி முற்பகல் 9.10 மணிவரை**

**மிருகசீரிடம் பிற்பகல் 5.13 மணிவரை**

**இராகுகாலம் 3.10-4.40 மணிவரை**

**சுபநேரம் 10.40-12.10 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | கூட்டு முயற்சி, அன்னியர் சந்திப்பு, காரிய அனுகூலம், போசனசுகம். |
| இடபம் | பணவிரயம், மனஸ்தாபம், குடும்பக் கவலை, காரிய தாமதம். |
| மிதுனம் | தெய்வசிந்தை, நண்பர்கள்சந்திப்பு, விருந்துபசாரம், கற்பனை மிகுதி. |
| கடகம் | இடமாற்றம், சுபசெலவு, சயனசுகக்குறைவு, வேலைச்சுமை. |
| சிங்கம் | காரிய அனுகூலம், பொருள் சோர்க்கை, பெருமையடைதல், குடும்ப நன்மை. |
| கன்னி | அதிக பிரயாசை நண்பர்கள் சந்திப்பு, போசனநன்மை, உற்சாகம். |
| துலாம் | பித்தரோகம், புதிய முயற்சி, பிரயாணம், கட்டுப்பாடு. |
| விருச்சிகம் | மரியாதைக்குறைவு, காரியதடங்கல், வாகனபயம், வீண்பகை. |
| தனுசு | களஸ்திர நன்மை, முயற்சி பலிதம், செல்வாக்கு, பொருள் சேர்க்கை. |
| மகரம் | சுபசெலவு, சகோதரர் உதவி, ஆரோக்கியம், முயற்சி கைகூடும். |
| கும்பம் | குடும்பக்கவலை, வியாபார நன்மை, மனச்சஞ்சலம், முயற்சி தாமதம். |
| மீனம் | மாதாசுகம், கல்வியில் ஆர்வம், சுபசெலவு, நல்லமுயற்சி. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

\- வளவன்

# இரு பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் சுட்டுக்கொலை

(கொழும்பு)

பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் இருவர் ஆயுதக்குழுவொன்றினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் காலி உணவட்டுன பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது. கொழும்பு போலிய கொட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட ஆமி மல்லி மற்றும் சுமித் எனப்படும். இப் பாதாளக்குழு உறுப்பினர்கள் நேற்று முன்தினம் காலை பொலிஸாரினால் உணவட்டுன பிரதேசத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் வழங்கிய தகவல்களுக்கு அமைய உணவட்டுன பிரதேசத்தில் மறைந்திருந்த மேலும் சிலரை கைதுசெய்வதற்காக இவர்களை பொலிஸார் அழைத்துச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் பயணித்த வாகனத்தின் மீது இனந்தெரியாத சிலர் துப்பாக்கி பிரயோகம் செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் இரண்டு சந்தேக நபர்களும் உயிரிழந்ததாக கபராதுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டவர்கள் இரண்டு துப்பாக்கிகள் மற்றும் ஒரு கைக்குண்டு என்பவற்றை கைவிட்டு தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (க-9)

# திருமலை நகரசபை தலைவராக கௌரி முகுந்தன் நியமனம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரசபையின் தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுப்பிர மணியன் கௌரி முகுந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச சபை தலைவராக தங்கவேலமுதம் காந்தரூபனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நியமித்துள்ளது.

திருகோணமலை நகரசபை பிரதித் தலைவராக கந்தசாமி செல்வராஜாவும், திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச சபை பிரதித் தலைவராக வெள்ளைத் தம்பி சுரேஸ்குமாரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனங்கள் தொடர்பாக எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா தேர்தல் ஆணையாளருக்கு தெரியப்படுத்துவார் என்றும் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

# உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் நிதி மோசடி; பிரபல வர்த்தகர் கைது

வற்வரி அறவீடு தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் நடந்ததாக கூறப்படும் நிதி மோசடியுடன் தொடர்புடைய சந்தேக நபர் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் பிரபல வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். சந்தேக நபரை விசாரணை செய்வதன் மூலம் சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய தகவல்கள் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வியாபாரி கடந்த சனிக்கிழமை கொழும்பு கோட்டை மஸ்த்திரோட் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது எதிர்வரும் 5ஆம் திகதிவரை அவரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

வற்வரி அறவீடு தொடர்பாக உள்நாட்டுஇறைவரித்திணைக்களத்தில் மோசடி செய்யப்பட்டுள்ள தொகை 357கோடியே33 இலட்சத்து 2 ஆயிரத்து 886ரூபா வாகும். (க-9)

**மிதிவெடி செயற்பாட்டின் விழிப்புணர்வுக்கும் பங்களிப்புக்குமான சர்வதேச தினம்.**

* அங்க இழப்பு ஆற்றல் இழப்பல்ல

* மிதிவெடி இல்லாத உலகைக்காண ஒன்றிணைவோம் ஒத்துழைப்போம்

* மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம்

(C/அ-281)

# யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அரசு உடன் நடைமுறைப்படுத்த வேண்டும்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தல்

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தாவிட்டால் தமிழீழ விடுதலைப்புலிகளை போருக்குத் தள்ளுகிற நிலைமைதான் ஏற்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் எச்சரித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு-கிழக்கில் துணை இராணுவக் குழுக்கள் நடமாட்டம் இருப்பதால் தேர்தல் நடைபெறுவது சாத்தியமற்றது அவ்வாறு தேர்தல் நடைபெற்றால் வன்முறைகள் ஏற்படும். இலங்கை இராணுவத்தின் ஆசீர்வாதத்துடன் செயற்படும் இக்குழுக்களினால் தேர்தல் களத்தில் இரத்தக்களறி ஏற்படும்.

இந்தக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படாத வரை அங்கு பதற்றமான சூழ்நிலையே ஏற்படும். தேர்தலை ஒத்திவைத்த தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கையை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முழுமையாக ஆதரிக்கிறது. இக்குழுக்களின் வன்முறைகளால் அமைதி முயற்சிகள் பாதிக்கப்படும். தேர்தலைவிட பேச்சுக்களே முக்கியமானது. வடக்கு-கிழக்கில் பெரும் பகுதியான பிரதேசங்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால் அரசாங்கத்தால் தேர்தல் நடத்த முடியாது.

இராணுவத்தாலும் அதனுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினராலும் வன்முறைகள், கடத்தல் சம்பவங்கள் மற்றும் படுகொலைகள் அதிகரித்துள்ளன. வடக்கு-கிழக்கு மக்கள் பாதுகாப்பற்ற நிலைமையில் உள்ளனர். எனவே அடுத்த சுற்றுப் பேச்சுக்களுக்கு முன்னராக துணை இராணுவக் குழுக்களினது ஆயுதங்கள் களையப்பட வேண்டும்.

இதேவேளை ஆழிப்பேரலைப் பொதுக்கட்டமைப்பு மற்றும் கூட்டாட்சி அமைப்பு உள்ளிட்ட எதுவித அதிகாரப் பகிர்வையும் ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சிகள் எதிர்த்தே வருகின்றனர் இத்தகைய எதிர்ப்புகளால் விடுதலைப் புலிகள் மட்டுமல்ல தமிழ் மக்களும் நம்பிக்கையிழந்துள்ளனர்.

இக்கட்சிகள் ஒருபோதும் தமிழ்த் தலைமையுடனான அதிகாரப் பகிர்வை ஒப்புக்கொள்ளப் போவதில்லை. இருப்பினும் இரு பெரிய கட்சிகளும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக பேசிவருகின்றன. ஆகையால் தங்களது தனிப்பட்ட அரசியல் வேறுபாடுகளை மறந்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அரசாங்கம் செயற்பட்டு அமைதி முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் என்பது ஒரு இரவில் உருவாக்கப்பட்டது அல்ல. நீண்ட விவாதங்களுக்குப் பின்னர் வடிவமைக்கப்பட்டது. அதில் எதுவித திருத்தமும் மேற்கொள்ளத் தேவையில்லை தமிழர்கள் தான் பாதிக்கப்பட்டவர்கள். முதலில் தனிநாடு கோரிய நாம் எமது நிலைப்பாட்டிலிருந்து விட்டுக்கொப்புகளை மேற்கொண்டோம். ஐக்கிய கட்டமைப்புக்குள்ளான தீர்வையும் ஏற்பதாகக்கூறினோம். ஆனால் தென்னிலங்கையின் நிலைப்பாடு என்ன?

முன்னைய அரசாங்கம் பொறுப்பேற்ற போது விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்தை ஒருதலைப்பட்சமாக அறிவித்தனர். அதை அரசாங்கமும் பின்பற்றியது ஆனால் தற்போதைய அரசாங்கம் முன்னைய அரசாங்கத்தின் நிலையை ஏற்க மறுக்கிறது. இத்தகைய நிலைப்பாடுகளினால் யுத்தநிறுத்த ஒப்பந்தம் மீது தமிழ் மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர்.

கடந்த 3மாதங்களில் ஜோசப் பரராஜசிங்கம், தமிழீழ விடுதலைப் புலி போராளிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கொல்லப்பட்டுள்ளனர். யார் இந்தக் கொலைகளுக்குப் பொறுப்பு? இவைகளாவது ஜெனீவா பேச்சுக்கு முன்னையது. ஜெனீவா பேச்சுக்களுக்குப் பின்னரும் துணை இராணுவக் குழுவினரால் இத்தகைய படுகொலைச்சம்பவங்கள் நிகழ்த்தப்படுகின்றன. இக்குழுக்களின் ஆயுதங்களைக் களைவதாக ஜெனீவா பேச்சுக்களில் அரசாங்கம் ஒப்புக்கொண்டது. ஆனால் இப்போது அத்தகைய துணை இராணுவக் குழுக்களே இல்லை என்று அரசாங்கமும் இராணுவமும் கூறுகிறது.

ஜெனீவா பேச்சுக்களுக்கு முன்னராக 500பேர் வரை இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். மிகவும் பாதுகாப்பற்ற படகுப் பயணத்தினூடாக அவர்கள் இந்தியா சென்றடைந்தனர். இராணுவத்தினரது இத்தகைய செயற்பாட்டால் தமிழ்த் தேசிய எழுச்சிப் படை எதிர்வினைகளை நடத்தியது. அது இயற்கையான எதிர்வினை. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தாவிட்டால் விடுதலைப்புலிகள் போருக்குத் தள்ளப்படுவார்கள். தென்னிலங்கை சக்திகள் தொடர்ந்து போர் முரசு கொட்டுகிறார்கள். அமைதிக்கான வாய்ப்புக்களை அவர்கள் குறைத்துக்கொண்டே வருகின்றனர். இத்தகைய நிலைமைகளால் விடுதலைப்புலிகள் மீண்டும் ஆயுதமேந்துகிற நிலைமை ஏற்படும் என்றார் சுரேஸ் பிரேமச்சந்திரன். (க)

## கப்டன் கோபி நினைவாக

# போராளிகளுக்கிடையே விளையாட்டுப் போட்டி



(கிளிநொச்சி)

2ஆம் லெப் மாலதி படையணியின் முதல் மாவீரர் கப்டன் கோபியின் 10ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 2ஆம் லெப் மாலதி படையணி போராளிகளுக்கிடையேயான விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இப் போட்டியின் மூன்றாவது நாளான கடந்த சனிக்கிழமை மாலதி படையணியின் பயிற்சிப் பாசறை ஒன்றில் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

போராளி ஈழவள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை போராளி முல்லைநிலா ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை களமுனைத் தளபதிகளில் ஒருவரான உசா ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து தியாகி அன்னை பூபதியின் திருவுருவப்படத்துக்கான ஈகைச் சுடரினை போராளி இசைப்பிரபா ஏற்றிவைத்தார். திருவுருவப் படத்துக்கான மலர் மாலையை போராளி இமைவிழி அணிவித்தார். (க)

# ஜே.வி.பி.ஹெல உறுமயவின் ஆதரவை ஜனாதிபதி மஹிந்த நிராகரிக்க வேண்டும்

## மஹிந்த விஜயசேகர வலியுறுத்தல்

அரசாங்கத்திற்கான ஜே.வி.பி.மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிராகரிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த விஜயசேகர வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் மீன்பிடித்துறை அமைச்சரான இவர். பி.பி.சியின் சிங்கள சேவையான சந்தேசியாவுக்கு இது தொடர்பாக அளித்துள்ள நேர்காணலில் சிங்களத் தேசிய வாதம் பேசுகின்ற கட்சிகளிடம் இருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விலகவேண்டும். சிங்களத் தேசிய வாதம் பேசுகின்ற ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி.கட்சிகளின் ஆதரவை மஹிந்த ராஜபக்ஷ கைவிட வேண்டும்.

ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் செயலற்ற தன்மையால் அக்கட்சி பல தேர்தல்களில் தோல்வியைத் தழுவியுள்ளது.

ஐக்கிய இலங்கைக்குள் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சித்தால் ஐக்கிய தேசியக் கட்சியின் எஸ்.பி.திஸநாயக்க, ஜி.எல்.பீரிஸ், பந்துல குணவர்த்ன உள்ளிட்ட முக்கிய தலைவர்களும் மஹிந்தவை ஆதரிப்பார்கள். அவர்கள் அனைவருமே ரணில் விக்கிரம சிங்கவின் சர்வாதிகாரப் போக்கினால் அதிருப்தி அடைந்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே மாத்தறை மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் மற்றும் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து மஹிந்த விஜயசேகரவை நீக்கியுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். இந்தியப்பயணம் மேற்கொள்ளும் முன்பாக அவர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். (க)

# சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் தமிழின அழிப்பு தொடர்கிறது-கேணல் ராம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்கென்று வருகை தந்துள்ள பன்னாட்டு தன்னார்த் தொண்டர்நிறுவனங்களில் தொழில் புரியும் பெண்கள் மீது சிங்கள தேச அரசாங்கம் கலாசாரச் சீர்கேட்டினை முன்னோக்கி நகர்த்தி தமிழர்களின் கலாசார பண்பாட்டு விழுமியங்களை அழித்துவருகின்றது. என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் ராம் தெரிவித்துள்ளார்.

ஆழிப் பேரலைத்தாக்கத்தின் பின்னர் வருகைதந்து செயற்பட்டுவரும் வெளிநாட்டு நிறுவனங்களில் தொழில் புரியும் பெண்களுடனான சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவட்ட செயலகத்தில் உடும்பன் கோட்ட அரசியல் பொறுப்பாளர் வீரமணி தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய கேணல் ராம் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் சிங்கள பேரினவாதிகள் தமிழின அழிப்பு செயற்பாடுகளை பல்வேறுபட்ட வடிவங்களில் மேற்கொண்டுவருகின்றனர்.

தமிழ்ப் பெண்களை சித்திரவதை செய்தல் மற்றும் கறிபழிப்பு, கொலை போன்ற வடிவங்களில் இன அழிப்பை மேற்கொண்டு வரும் பேரினவாதிகள் அதன் தொடர்ச்சியாக தன்னார்வத்தொண்டர் நிறுவனங்களில் பணியாற்றும் வெளிநாட்டவர்கள் மூலம் மிகவும், வறுமைக்கோட்டிற்குட்பட்ட ஏழ்மைநிலைமையில் உள்ள பெண்களுக்கு பணத்தாசை காட்டி கலாச்சார சீரழிவுகளை ஏற்படுத்தி, படங்கள் எடுத்து இறுவெட்டுகள் மூலம் வெளியிட்டுள்ளனர். என்று முறைப்பாடுகள் எமக்கு கிடைத்துள்ளன.

எனவே எமது தமிழ் பெண்கள் அனைவரும் இதனை உணர்ந்து மலரப்போகும் தமிழீழத்தில் இப்படியான சம்பவங்கள் நடைபெறாது தமிழர்களது கலாசார பண்பாட்டு விழுமியங்களைக் காக்க வேண்டியது பெண்களின் தார்மீகக்கடமையாகும் எனவும் தெரிவித்துள்ளார். இந்த சந்திப்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன், தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்டத்தளபதி ஜனார்த்தனன் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் தொழில் புரியும் பெண்கள் எனப் பலர்கலந்துகொண்டனர். (க)

# சவுதியில் 3 சிங்களவர்களுக்கு மரணதண்டனைத் தீர்ப்பு

சவூதி அரேபியாவில் மூன்று சிங்களவர்களுக்கு எந்த நேரத்திலும் மரண தண்டனை நிறைவேற்றப்படலாம் என சர்வதேச மன்னிப்புச் சபை கவலை வெளியிட்டுள்ளது.

டி.டி.ரஞ்சித் சில்வா, இஜேவிக்ரன் கொரிய, சனத் புஸ்பகுமார ஆகிய மூன்று சிங்களவர்களும் கொலைக் குற்றத்துக்காக ரியாத்தில் உள்ள அல்ஹெர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர். இம் மூவருக்குமான மரண தண்டனை கடந்த ஆண்டு மார்ச் மாதம் உறுதிசெய்யப்பட்டது.

சவூதி அரேபிய மன்னர் ஒப்புதல் அளித்தால் மூன்று சிங்களவர்களும் எந்த நேரத்திலும் தூக்கிலிடப்படலாம் என்பதால் கவலை கொள்வதாக இங்கிலாந்தின் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

சவூதி சட்டத்தின் கீழ் தாங்கள் செய்தது குற்றம் என்றாலும் மரண தண்டனை விதிக்கும் அளவிற்கு அது பெருங்குற்றம் அல்ல என்று மூன்று சிங்களவர்களும் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் குற்றம்சாட்டப்பட்டுள்ளோருக்கு மேலதிக சட்ட உதவிகள் செய்யப்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கூறியுள்ளது. (க)

## இன்று ஒரு தகவல்

# வெளிச்சங்கள்

இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த சமயம் ஒரு நாள் நடு இராத்திரி வெளிச்சத்துக்கு வழியே இல்லை அந்த இருட்டில் ஜப்பானிய போர் வீரர்கள் வரைபடங்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது. அதைப் பார்த்துத்தான் போக வேண்டிய திசையையும் இடத்தையும் புரிந்து கொள்ளவேண்டும் ஆனால் அந்த நேரத்தில் அவர்களிடம் விளக்குகள் எதுவும் இல்லை ஆனாலும் படத்தைப் பார்ப்பதற்குக் கொஞ்சம் வெளிச்சம் வேண்டும் என்ன செய்தார்கள் தெரியுமா?

ஏதோ ஒரு பொருளை உள்ளங்கையில் எடுத்துக் கொண்டார்கள் அதில் கொஞ்சம் தண்ணீரை விட்டார்கள் உடனே அதிலிருந்து ஒரு வெளிச்சம் உண்டானது அந்த வெளிச்சத்தின் உதவியால் வரைபடத்தைப் பார்த்துப் புரிந்துகொண்டார்கள் அது சரி! அவர்கள் கையில் எடுத்த பொருள் என்ன தெரியுமா? அதன் பெயர் லுசி பெரின் சிப்ரிடினா என்ற ஓர் உயிரினத்திலிருந்து சேகரிக்கப்பட்டபொருள் அது.

கடற்கரைக்குப் பக்கத்தில் ஆழமான பகுதிகளில இந்த உயிரினம் இருக்கும் இதன் உடலில் உள்ள சுரப்பிகள் லுசி பெரலின் லுசிபெரோல் என்ற பொருளைக் கடல் நீரில் வெளியேற்றுகிறது. அது இரண்டும் ஒட்சிசன் முன்னிலையில் இணைந்து வினைபடும் பொழுது பிரகாசமான நீல நிற ஒளி உண்டாகிறது. இதைத்தான் அந்தப் போர் வீரர்கள் அன்றைக்குச் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக்கொண்டனர்.

வெளிச்சம் என்பது வெப்பத்திலிருந்து மட்டும்தான் உண்டாகிறது என்று நினைக்காதீர்கள் சில பொருள் இன்னொரு மூல ஒளி இருக்கும் போது மட்டும் ஒளிரும் அந்த வெளிச்சம் இல்லாவிட்டால் இது ஒளிராது இதற்குப் பெயர்தான் **Fluorescence** பெட்ரோலியம் குயினைன் சல்பேற் ஆவி நிலையில் உள்ள அயடின் சோடியம் பாதாரசம் போன்றனவெல்லாம் அதற்கு உதாரணங்கள் இன்னும் சில பொருட்கள் எப்படிப்பட்ட தென்றால் மூல ஒளியை அகற்றிய பிறகும் வெளிச்சம் கொடுத்துக் கொண்டே இருக்கும் இதற்குப் பெயர் **Phosp hore scence** துர்கநாக சல்பைட் இப்படிப்பட்டதுதான்.

சில ரசாயன செயற்பாடுகள் நடக்கும் போது கூடவெளிச்சம் உண்டாகும் அதற்குப் பெயர் கெமிலுமின்சென்ஸ் பொசுபரஸ் காற்றல் அதன் ஒக்சைட்டாக மாறும் பொழுது வெளிச்சம் உண்டாவது இந்த வகையில் தான் இதே மாதிரி சில உயிரினங்களில் வேதிவினைகள் நிகழும் போதும் ஒளி உழிழப்படுகிறது. மின்மினிப்பூச்சி இந்தரகம்.

கொஞ்ச காலத்திற்கு முன்பு (1988இல்) திருச்செந்தூரிற்குப் பக்கத்தில் ஒரு அதிசயவெளிச்சத்தை நிறையப் பேர் பார்த்தார்கள் திருச்செந்தூர் காயல்பட்டணம் வீரபாண்டியன் பட்டணம் ஆலந்தலை ஆகிய இடங்களில் கும்மிருட்டு வேளையில் கடலில் அலை வீசும் போது கண்ணைக் கவரக்கூடிய பச்சை நிற ஒளி தெரிந்திருக்கிறது. அந்தப் பக்கத்தில் உள்ள மக்கள் கூட்டம கூட்டமாகப் போய்நின்று வேடிக்கை பார்த்திருக்கிறார்கள். கடல் அலை கரையைத் தொட்டுவிட்டுப் போகும் போது மின்மினிப் பூச்சி வெளிச்சம் மாதிரி பெரிதாகத் தெரிந்திருக்கிறது. சிலா் அந் தக் கடல் நீரை ஒரு பாத்திரத்தில் எடுத்து அதை ஊற்றிப்பார்த் திருக்கிறார்கள் அப்போதும் அந்த வெளிச்சம் தெரிந்ததாம்.

இதறகு என்ன காரணம் என்று நினைக்கிறீகள்? **Bio-Luminescence** தான் **Marine Dinoand Lagellates** கடலில் உள்ள ஒரு நுண்ணியிரினம் இது. இதுதான் இந்த அதிசயமான பச்சை நிற வெளிச்சத்திற்குக் காரணம் இதுபோல் ஏகப்பட்ட புழு இனஙகள் பக்ரீ ரியாக்கள் கடற் பஞ்சு உயிரினங்கள் கூட ஒளி உழிழககூடிய தன்மையுடன் இருக்கிறது.

இனக் கவர்ச்சிக்கு, இரைதேடுவதற்கு, பாதுகாப்பிற்கெல்லாம் அந்த வெளிச்சம் அதற்கு உபயோகப் படுகிறது. இதுதான் நமக்குத்தெரிந்த காரணங்கள் அது ஏன் அப்படி வெளிச்சத்தைக் காட்டுகின்றது. என்பதற்கு நமக்குத் தெரியாத இன்னும் கண்டு பிடிக்கமுடியாத பல காரணங்களும் இருக்கிறது. என்கின்றனர். இயற்கையின் ரகசியங்களை அவ்வளவு சுலபமாக கண்டு பிடித்துவிட முடியுமா என்ன? இருந்தாலும் மனிதன் எல்லாவற்றையும் கண்டுபிடித்தவன் மாதிரி பேசிக்கொண்டிருப்பவன் அது அவனது சுபாவம்.

திடீரென்று ஒருமுறை மின் சாரம் நின்று விட்டது. வீடு முழுதும் இருட்டு கொஞ்ச நேரம் இருந்து பார்த்தார்கள் மின் சாரம் வருவதாகத் தெரியவில்லை வீட்டில் மெழுவர்த்தியிருந்தது நெருப்புப் பெட்டி இல்லை "கொஞ்சம் இரு... பக்கத்துவீட்டுக்குப் போய் நெருபபுப் பெட்டிவாங்கி வருகிறேன்" என்று போனார் குடும்பத் தலைவர் போனவர் திரென்று கத்திக்கொண்டே ஓடிவந்தார் என்ன வெனறு விசாரித்தார்கள். "வாசலில் நாயைக் கட்டி வைத்திருக் கிறாாகள் போலிருக்கிறது. தெரியாமல் மிதித்துவிட்டேன் கடித்து விட்டது"என்றார் காலைத் தடவிக்கொண்டே.

மறுநாள் விடிந்ததும் இவர்பக்கத்து வீட்டுக்காரரைப் பார்த்துச்சொன்னார் நேற்றிரவு தீப்பெட்டி வாங்கவந்தேன் உங்கள் வீட்டு நாய் கடித்துவிட்டது. ஓடிவந்துவிட்டேன். என்றார் ஓ... அது நீங்கள் தானா சார்...." என்றார்அவர் "ஆமாம் சார்" என்றார் இவர் "மன்னிககவேண்டும் சார்... எங்கள் வீட்டில் இப்போது நாய் இல்லை. நேற்று மின்சாரம் நின்றதும் நான் தான் வாசலில் வந்து உட்கார்ந்திருந்தேன் என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# நான்கு வருடங்களுக்கு தேர்தல் இல்லை! என்கிறார் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கதிற்கு மக்களின் ஆதரவுதொடர்ச்சியாக கிடைத்துவருகின்றபோதும் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு எவ்விதமான தேர்தலும் நடத்தப்படமாட்டாது. இக் காலப்பகுதியில் மஹிந்த சிந் தனையைமுன்னெடுத்துநாட்டை அபி விருத்திப்பாதைக்கு இட்டுச் செல்வதே அர சாங்கத்தின் பிரதான நோக்கமாகும் என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

இலங்கை மன்ற கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர்களான தினேஷ் குணவர்த்தன டியூ. குணசேகர மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவர் ஆர். யோகராஜன் ஆகியோர் கலந்துகொண்ட இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு அமோக வெற்றி கிடைத்துள்ளது. பாராளுமன்றத்தில் கூட்டமைப்பு அரசாங்கத்தின் பெரும்பான்மை நாளுக்கு நாள் அதி கரித்துக்கொண்டே வருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங் கத் திற்கு ஆதரவு வழங்கி வருகின்றனர். இந்நிலையில் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தையும் கூட்ட மைப்பு அரசாங்கம் கைப்பற்றிவிட்டது. இதனைப் பயன்படுத்தி மஹிந்த சிந்தனையின் மூலமாக நாட்டை அபிவிருத்தி செய்வதே எமது பிரதான இலக்காகும்.

மஹிந்த சிந்தனையை முன்னெடுப்பதற்கு மக்கள் பூரண ஆதரவு வழங்கியுள்ளனர். இதனை பயன்படுத்தி நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் சென்று பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும்.

அரசாங்கத்திற்கு கிடைத்துள்ள ஆதரவைப் பயன்படுத்தி பாராளுமன்றம் கலைக்கப்படமாட்டாது அதற்கான தேவையும் இல்லை கட்சி தீர்மானிக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் ஐக்கிய சுதந்திர முன்னணி வெற்றியீட்டிய உள்ளூராட்சி சபைக்கான தலைவர் பிரதி தலைவர் நகரசபை தலைவர் பதவிகளுக்கு யாரைதெரிவு செய்யவேண்டும் என்பதை கட்சி தீர்மானிக்கும்.

வேட்புமனு தாக்கல் செய்தபோது கட்சி வழங்கிய அறிவுரை நடைமுறைகளை பலர் மீறியுள்ளனர் இவ்வாறானவர்கள் அதிகபடியான விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தாலும் அவர்களுக்கு தலைவர் பதவி வழங்குவதா? இல்லையா? என்பதை கட்சியே தீர்மானிக்கும் என்றார். (க)

# காணாமல் போகும் இத்தாலிய ஆழிப்பேரலை படகுகள்

(கொழும்பு)

ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிக்காக இத்தாலிய செஞ்சிலுவைச் சங்கத்தால் வழங்கப்பட்ட படகுகள் மர்மான முறையில் காணாமல் போவதாக தெரியவந்துள்ளது.

இத்தாலிய செஞ்சிலுவைச் சங்கத்தினர் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனத்தினிடம் ஒப்படைத்த பின்னர் வட பகுதிக்குக் கொண்டு செல்லும் வழியில் இவை காணாமல் போனதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் பட்றிக் புல்லர் கூறுகையில்,

இத்தாலிய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி பினோ உன்கரோவிடம் ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளில் ஈடுபட்டுவந்தார். அவர் தற்போது இத்தாலி திரும்பியுள்ளார்.

உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனமான சிறீ–எஸ்எல். என்ற நிறுவனத்தினர் பினோ உன்கரோவிடம் ஆழிப் பேரலை மீளமைப்புக்காக படகுகளை வழங்குமாறு கோரியிருந்தனர்.

ஆனால் தாங்கள் படகுகளை வழங்குவதில்லை என்றும் மீளமைப்புப் பணிகளை மட்டுமே மேற்கொள்வதாகவும் பினோ உன்கரோ கூறியுள்ளார்.

இருப்பினும் சிறீ–எஸ்எல் அமைப்பினர் பினோ உன்கரோவுடன் நடத்திய பேச்சுக்களின் போது 11 படகுகளை இறக்குமதி செய்வதாகக் கூறினார். அதன் பின்னர் படகுகள் தொடர்பாக பினோ உன்கரோவிடம் உள்ளூர் நிறுவனத்தினர் கேட்ட போது இறக்குமதி செய்த 6 படகுகள் வடபகுதிக்குக் கொண்டு செல்லும் போது மர்மான முறையில் காணாமல் போனதாகத் தெரி வித்துள்ளார்.

தான் அளித்த உறுதிமொழியின் படி 5 படகுகளில் மேலும் 2 மட்டுமாவது அளிப்பதாகவும் பினோ உன்கரோ கூறியுள்ளார். உள்ளூர் நிறுவனத்தினர் மீண்டும் பினோ உன்கரோவை தொடர்பு கொண்ட போது மேலும் 4 படகுகளும் மர்மான முறையில் காணாமல் போய் விட்டதால் தன்னால் எதனையும் ஒப்படைக்க இயலாத நிலையில் இருப்பதாக் கூறியுள்ளார். என்றார் பட்றிக் புல்லர். (க)

# பொதுமக்களுக்கு சேவையாற்றுவதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும்

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

மஹிந்த சிந்தனைக்கொள்கையை மேலும் ஆக்கபூர்வமாக அமுல் செய்வதற்கு உள்ளூராட்சித் தேர்தலில் பெற்றுக்கொள்ளப்பட்ட அமோகவெற்றி பயன்படுத்தப்படவேண்டுமென்று கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்து குறுகிய காலத்தில் நாட்டை அபிவிருத்தி செய்வதற் கான தமது கொள்கைக்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார் .

இதேவேளை, பொதுமக்களுக்கு சேவையாற்று வதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று குறிப்பிட்ட அமைச்சர் தேர்தல் வரலாற்றில் ஐக்கிய தேசியக் கட்சி மிக மோசமான தோல் வியைத் தழுவியுள்ளது என்றும் கூறினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஜே.வி.பியுடனும் ஜாதிக ஹெல உறுமயவுடனும் இணைந்து போட்டியிட்டிருந்தால் ஐக்கிய தேசியக் கட்சியினால் ஓர் உள்ளூராட்சி சபையையேனும் கைப்பற்றியிருக்க முடியாதிருக்கும்.

தேர்தல் முடிவுகளின்படி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 85.58 சதவீதமான உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றியுள்ளது.

இவ் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் போது ஆசை விருப்பு வாக்குகளை அடிப் படையாக வைத்து மேற்கொள்ளப்படுமென்றும் அவர் மேலும் கூறினார். (க–7)

# ஜாதிக ஹெல உறுமய கட்சி விரைவில் கலைக்கப்படும்?

(கொழும்பு)

உள்ளூராட்சிசபைத்தேர்தலில்படுதோல்வியடைந்த நிலையில் சிங்களப் பேரினவாதக் குரலை உயர்த்திப் பிடித்த ஜாதிக ஹெல உறுமய கட்சி விரை வில் கலைக் கப் படக்கூடும் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிக ளில் ஒன்றுடன் அக்கட்சி இணைக்கப்படக்கூடும் என் றும் கூறப்படுகிறது.

226 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் மொத்தம் 4 ஆயிரத்து 442 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களில் 12பேர் மட்டுமே ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்தவர்கள்.

சிங்களப் பேரினவாதக் குரல் எதிர்காலத்தில் பயன் தரப்போவதில்லை என்பதை உணர்ந்த அக் கட்சியின் மூத்த தலைவர்களான பௌத்த பிக்குகள் ஜாதிக ஹெல உறுமய என்ற கட்சியையே கலைத்துவிட்டு தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சியில் இணைய முடிவெடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இருப்பினும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் என். எஸ். வர்ணசிங்க இதை நிராகரித்துள்ளார். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமது கட்சி படுதோல்விய டைந்திருக்கும் போதும் கிராமங்கள் அளவில் கட்சியினது நடவடிக்ககளை விரிவாக்கம் செய்யப்போவதாக அவர் கூறினார். (க)

# அரசுக்கும்-க.கா.குழுவுக்குமிடையில் "கடிதப் போர்"

(கொழும்பு)

தென் தமிழீழத்தில் கருணா குழு இயங்குவது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையே கடிதப் போர் நடைபெற்றுள்ளது.

இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் ஹாக்ரப் ஹொக்லெண்ட்டுக்கு 2 பக்கக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

வாழைச்சேனையில் சிவிலியன் உடையில் 10முதல் 15வரையிலான ஆயுததாரிகளை கண்காணிப்புக்குழு சந்தித்தபோது அவர்கள் தங்களைகருணா குழுவினர் என்று கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்தனர். சிவிலியன்உடையில் கருணா குழு என்று அழைக்கப்படும் மேலும் பல ஆயுததாரிகள் நடமாட்டம் தொடர்பாக கண்காணிப்புக் குழுவினருக்கு தொடர்ந்து முறைப்பாடுகள் வந்துகொண்டிருந்தன. இக் குழுவினர் வவுனியாவுக்குள்ளும் ஊடுருவியுள்ளனரோ என கண்காணிப்புக் குழு சந்தேகிக்கிறது. ஜெனீவாப் பேச்சுக்கள் முடிவடைந்தபெப்ரவரி 23ஆம் திகதிக்குப்பின்னர் இலங்கை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் பெருமளவு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் வவுனியாவில் மட்டும் 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதக் குழுவினர் இயங்கவில்லை என்று இராணுவம் தெரிவித்திருந்தது. எங்களுக்குத் தெரிந்தவரை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இக் குழுவினர் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றனர். ஆயுதக் குழுவினரது விடயத்தை அரசாங்கம் பாரதூரமாகக்கருத வேண்டும். கண்ணைமூடிக்கொண்டு இருக்கக் கூடாது என்று அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்குப் பதிலளித்து பாதுகாப்பு அமைச்சு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ அனுப்பிய ஒரு பக்கக் கடிதத்தில் கண்காணிப்புக் குழுவினர் தவறான தகவலைத் தெரிவித்திருப்பதாகவும், அவதூறை ஏற்படுத்துவதாகவும் குற்றம்சாட்டியிருந்தார்.

அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதக் குழுவினர் இயங்குவதாக ஆதாரங்களின்றி எதுவித முடிவுக்கும் கண்காணிப்புக் குழுவினர் வரக்கூடாது என்றும் இது தொடர்பில்விவாதிக்கசந்திப்பு ஒன்றை நடத்த வேண்டும் என்றும் கோட்டா ராஜபக்ஷ அக் கடிதத்தில் கூறியுள்ளார். கண்காணிப்புக் குழுத் தலைவர் பதவியிலிருந்து விலகிச்செல்வதற்கு முன்பாக மார்ச் 30 ஆம் திகதி இக்கடிதத்தை ஹைறப்ஹொக்லெண்ட் அனுப்பியுள்ளார்.

இதேவேளை துணை இராணுவக் குழுவினரது ஆயுதங்கள் களையப்படாவிட்டால் எதிர்வரும் ஏப்ரல் பேச்சுக்களில் இந்தவிடயம் குறித்து ஆராயப்பட வேண்டி இருக்கும் என்று விடுதலைப் புலிகளின் பேச்சுக்குழுத் தலைவரும் அரசியல் ஆலோசகருமான அன்ரன் பாலசிங்கம் எச்சரித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (கு)

## உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவான பிரதிநிதிகளின்

# பெயர்ப்பட்டியலை அனுப்புமாறு தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சிச் சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதிநிதிகளின் பெயர் பட்டியலை துரிதமாக தேர்தல் செயலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க சகல தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார். எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் குறித்த பெயர்ப்பட்டியலை அனுப்பிவைக்குமாறு தேர்தல் ஆணையாளர் கோரியுள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதியுடன் சகல உள்ளூராட்சிசபைகளினதும் பதவிக்காலம் முடிவடைகின்றது.

இதற்கு முன்னர் உள்ளூராட்சி சபைகளின் தலைவர், உபதலைவர் ஆகியோரின் பெயர்கள் வர்த்தமானியில் வெளியிடப்படவேண்டுமென்று தேர்தல் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் அறிவுறுத்துமாறு தெரிவத்தாட்சி அதிகாரிகளை தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை உள்ளூராட்சி சபைத் தேர்தல் விருப்பு வாக்குகளைப் பெற்ற வேட்பாளர்கள் விபரங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை விருப்பு வாக்கு எண்ணிக்கையில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக சில வேட்பாளர்கள் முறையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# புலிகளின் பயணத்தை தடைசெய்க!

## சுவிஸ் அரசுக்கு வலியுறுத்தல்

ஜெனீவாவில் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பேச்சுக்களுக்குப் பின்னர் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் பயணங்களைத் தடைசெய்யுமாறு சுவிஸ் அரசாங்கத்தை இலங்கை அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

கொழும்பில் சுவிஸ் தூதுவர் பெர்னாண்டினோ ரெகுஜெனியை கடந்த வாரம் சந்தித்த இலங்கை அரச பேச்சுக்குழுவின் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா இதை வலியுறுத்தினார்.

பெப்ரவரி பேச்சுக்களுக்குப் பின்னர் 5 நாட்கள் மேலதிகமாக ஜெனீவாவில் தங்கியிருந்த விடுதலைப் புலிகள் நிதி சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும், இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்துள்ள தமிழர்களுடன் அவர்கள் சந்திப்புகளை நடத்தியதாகவும் சுவிஸ் அரசாங்கத்திடம் குற்றச்சாட்டுகளாக நிமால் சிறிபால டி சில்வா முன்வைத்தார்.

ஜெனீவாவில் ஏப்ரல் 19ஆம் திகதியில் ஆரம்பமாகவுள்ள பேச்சுக்களுக்கான இடம் தொடர்பிலும் சுவிஸ் தூதுவருடன் நிமல் சிறிபால டி சில்வா விவாதித்தார்.

பெப்ரவரி பேச்சுகள் நடைபெற்ற சட்டியூடி போசி அரண்மனை வேறு நிகழ்வுக்காக தற்போது பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் முன்னைய பேச்சுக்கள் நடைபெற்ற அரண்மனையின் கூரை தாழ்வாக இருந்தால் பேச்சுக்குழுவினர் பலரது தலைகளும் குட்டுவிழுந்தது.

இதையடுத்து பேச்சு நடைபெறும் இடத்தை மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. (கு)

# திருகோணமலை தேர்தல் முடிவு தமிழ்த்தேசியத்துக்கான வெற்றி

## என்கிறார் சி.எழிலன்

திருகோணமலை நகரசபைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை தமிழ் மக்கள் தெரிவு செய்துள்ளதானது தமிழ்த் தேசியத்திற்கான வெற்றி என்று விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.



திருகோணமலை நகரசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் கூட்டம் நேற்று முன்தினம் காலை கடற்கரைச் சேனையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய சி.எழிலன், தெரிவு செய்யப்பட்டிருக்கிற உறுப்பினர்களும் தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

திருகோணமலை நகரசபை வரலாற்றில் முதல்முறையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 10 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம், விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் சொர்ணம், திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி வசந்தன், திருமலை விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் தீபன் ஆகியோரும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். (கு)

# பாராளுமன்றம் இன்று கூடும்

(கொழும்பு)

பாராளுமன்றம் இன்று காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்கு பண்டார தலைமையில் கூடவுள்ளது. பாராளுமன்றம் நாளை மறுதினம் வியாழக்கிழமை வரை தொடர்ந்து செயற்படும்.

இன்று காலை சபாநாயகர் தலைமையில் நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள சட்டமூலங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

அதேவேளை பாராளுமன்ற அமர்வுகளை தொடர்ந்து பகிஷ்கரிப்பதா அல்லது சபை அமர்வுகளில் கலந்துகொண்டு எதிர்ப்பைத் தெரிவிப்பதா என்பது பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று காலை பாராளுமன்ற கூட்டத்தில் கூடி ஆராயவுள்ளது. எவ்வாறாயினும் கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று சபை அமர்வுகளில் கலந்துகொள்வர் எனவும் தமிழ் மக்கள் மீது இராணுவ அடக்குமுறைகள் தொடருவது குறித்து அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து எதிர்ப்புகளை வெளிப்படுத்துவார்களெனவும் தெரியவருகின்றது. (கு)

# இராணுவத்தில் முஸ்லிம் படையணி; முஸ்லிம் தலைவர்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

இராணுவத்தில் தனி முஸ்லிம் படையணி உருவாக்கப்படுவதற்கு முஸ்லிம் தலைவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் அட்டாளைச்சேனையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற முஸ்லிம் சபையின் கூட்டத்தில் பங்கேற்ற பலரும் அரசாங்கத்தின் இத்திட்டத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

முஸ்லிம் சபையின் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

தென் தமிழீழத்தைச் சேர்ந்த முஸ்லிம் அமைப்புக்களின் ஒருங்கிணைப்பாளர்கள், உலாமாக்கள், கல்வியாளர்கள், அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட 300க்கும் மேற்பட்டோர் இக் கூட்டத்தில் கலந்துகொண்டுதங்களது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்தும் வகையிலான இலங்கையின் முஸ்லிம் படையணித் திட்டத்திற்கு முஸ்லிம் மக்கள் பலியாக வேண்டாம் என்றும் இக் கூட்டத்தில் பங்கேற்ற பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இலங்கை அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும் இக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்த அனைத்துத் தரப்பினரும் ஒற்றுமையாக நின்று ஒரே குரலில் உரிமைகளை வலியுறுத்த வேண்டும் என்றும் இக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசியோர் வலியுறுத்திக் கூறினர். (கு)

## "பலிக்களம்" திருப்பாடுகளின் காட்சிகள்

(ஊர்காவற்றுறை)

யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கில் யேசுவின் திருப்பாடுகளைச் சித்தரிக்கும் 'பலிக்களம்' ஆற்றுகை நாளை புதன் கிழமை தொடக்கம் 9ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை ஐந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

சன நெருக்கடியைத் தவிர்க்கும் பொருட்டு நேரகாலத்துடன் வந்து காட்சிகளைப் பார்க்குமாறு திருமறைக் கலாமன்ற நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை ஊர்காவற்றுறையிலிருந்து செல்லும் நாடகப் பிரியர்களுக்காக ஊர்காவற்றுறை தனியார் சிற்றூர்தி சங்கம் மாலையில் போக்குவரத்து ஒழுங்குகளை செய்துள்ளதாக நேரக் கணிப்பாளர் அன்ரன் தெரிவித்தார்.

உலக இரட்சகர் யேசுநாதர் சிலுவையிலறையும் படி தலைமைச் சங்கத்தால் தீர்ப்பிடப்பட்டு யூதர்களால் பிடிக்கப்படுவது முதல் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுவது வரையிலான 14 நிலைகளையும் கொண்ட திருப்பாடுகள் இந்த பலிக்களத்தில் தத்ரூபமாக காட்டப்படுகிறது. (க-72)

## செயலமர்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழக அனுசரணையுடன் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக புவியியல் மற்றும் வரலாறு பாட செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

இன்று புவியியல் பாடத்துக்கான செயலமர்வும் நாளை வரலாறு பாட திட்டத்திற்கான செயலமர்வும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (க-108)

★ ★ ★

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய கணித வள நிலையத்தினால் தரம் 11இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கணித செயலமர்வு எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை நடாத்தப்படவுள்ளது.

எனவே உரிய பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலையில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையையும் பயிற்சியில் கலந்துகொள்ளும் ஆசிரியர்களின் எண்ணிக்கையை அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுள்ளார்.

மேலும் நாளை புதன்கிழமைக்கு முன்பு கணித வள நிலையத்துடன் தொடர்பு கொண்டு தமக்குரிய பொருத்தமான திகதியைப் பெற்றுக்கொள்ளுமாறும் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (க-108)

## ஆறாம் வெள்ளி வழிபாடு

(ஊர்காவற்றுறை)

யாழ்-புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் தவக்காலத்தின் ஆறாம் வெள்ளிக்கிழமையான எதிர்வரும் 7ஆம் திகதி காலை திருப்பலியும் திருச்சிலுவைப் பாதையும் நடைபெறவுள்ளது.

புனித வியாகுல அன்னை கெபியில் இந் நிகழ்வு நடைபெற்று பின்பு நேர்த்திக்காரர்களால் பால்கஞ்சி அன்னதானம் வழங்கப்படவுள்ளது. (க-72)

## மோட்டார் சைக்கிள் மீட்பு

(துன்னாலை)

நெல்லியடிப் பகுதியில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளை மானிப்பாய் பகுதியில் வைத்து பொலிஸார் மீட்டுள்ளனர். கரவெட்டியைச் சேர்ந்த சிறிகுமர் என்பவரின் மோட்டார் சைக்கிளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இம் மோட்டார் சைக்கிளை திருடிய நபர்கள் அதன் சில உதிரிப்பாகங்களை கழற்றி மாற்றிவிட்டு மானிப்பாய் வீதியில் வேகமாக ஓட்டிச்சென்றவேளை பொலிஸார் அவர்களை வழிமறித்தனர். அப்போது சைக்கிளை குறித்த நபர்கள் போட்டுவிட்டு தப்பியோடிவிட்டனர்.

இதனையடுத்து மானிப்பாய் பொலிஸார் நெல்லியடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து உரியவரிடம் மோட்டார் சைக்கிள் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-101)

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறும் என வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (க-108)

# பாரம்பரிய விளையாட்டில் கிளித்தட்டு

நமது நாட்டின் பாரம்பரிய விளையாட்டுக்களில் பல காலப்போக்கில் கைவிடப்பட்டாலும் இப்பொழுது அவை மெல்ல மெல்ல உயிர்த்தெழ ஆரம்பித்துள்ளன. மேலைத்தேசங்களிலிருந்து இறக்குமதியான பல விளையாட்டுக்கள் நமது பாரம்பரிய விளையாட்டுக்களையொத்ததாக இருப்பதை விளையாட்டு ஆர்வலர்கள் அறிவர். ஒருகாலத்தில் பிரபல்யமாக இருந்து, பின்னர் படிப்படியாக வழக்கொழிந்து வந்த நமது பாரம்பரிய விளையாட்டுக்கள் இப்பொழுது மெல்ல மெல்ல உயிர்தெழுந்து வளர்ச்சி பெற்றுவருவது காலத்தின் கட்டாயமாகிவிட்டது.

இந்த வகையில் நமது பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான 'கிளித்தட்டு' விளையாட்டுப்பற்றி விபரிக்கிறது இந்தக் கட்டுரை.

இலங்கையில் பல பாரம்பரிய விளையாட்டுக்கள் உண்டு. அந்தக் காலத்தில் மக்கள் பொழுதுபோக்கிற்காகவும் ஓய்வு நேரத்தை மகிழ்ச்சியாகக் கழிப்பதற்காகவும் பல விளையாட்டுக்களை விளையாடினார்கள். அதற்கென ஆரம்பகாலங்களில் தமக்குள்ளே பல சட்ட திட்டங்களை அமைத்து விளையாடி மகிழ்ந்தனர். இச் சட்டத்திட்டங்கள் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டும் காணப்பட்டன.

இவ்வாறு விளையாடும் விளையாட்டுக்கள் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறு பெயர்களை வைத்தும் விளையாடப்பட்டுள்ளது. விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையும் அவ்வாறே காணப்பட்டுள்ளது. அந்த வகையில் கிளித்தட்டு, சடுகுடு, கிட்டிப்புள் போன்ற பல விளையாட்டுக்கள் விளையாடப்பட்டன. இதில் கிளித்தட்டின் வளர்ச்சியைப் பற்றி ஆராய்வோம்.

இலங்கை ஒரு விவசாய நாடு. இந்நாட்டில் விவசாய மக்கள் அதிக அளவில் காணப்படுகின்றனர். அவர்கள் தமது மகிழ்ச்சியை கொண்டாட அரிவுவெட்டுப் பாடல்கள் பாடி மகிழ்வது போன்று விளையாட்டுக்களில் கிளித்தட்டு விளையாட்டை மிகவும் விரும்பி விளையாடியுள்ளனர். அந்த வகையில் இவ் விளையாட்டு நெல் விதைப்பு காலங்களில் வயல்களில் நெல்லை பொறுக்க வரும் கிளிகளைக் கமக்காரன் வரம்புகளில் ஓடித்திரிந்து காக்கும் ஒரு செயற்பாடாக ஆரம்பத்தில் காணப்பட்டுள்ளது.

நெல் விதைகளைப் பொறுக்க வரும் கிளிகளை வரம்புகளில் ஓடித் திரிந்து காக்கும் செயற்பாட்டை இவ் விளையாட்டில் காப்போர் கமக்காரனாகவும், புகுந்து ஓடி திரிவது கிளியாகவும், தட்டுக்கள் வயல் பாத்தியாகவும், சுவடுகள் வரம்பாகவும், கற்பனை செய்யப்படுகின்றது. இவ்வாறாக ஆரம்பித்த இவ் விளையாட்டின் திறனாகப் புகுதலும் காத்தலும் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் ஒரு அணி புகுதல் செயற்படும் போது அந்த அணி அடிபட்டால் மற்றைய அணி புகும். இல்லையெனில் தொடர்ந்து திறமையுள்ள அணி புகுந்து பழம் எடுக்கும் இவ்வாறக அதிக பழம் எடுக்கும் அணி வெற்றி அணி ஆகும்.

அடுத்து இவ் விளையாட்டில் 'அழாப்பல்' அதிகம் உண்டு. கையால் அடிக்காமல் அடி என்பது, பிழையாக அடிப்பது, பிழையாக கால்வைப்பது, வீரமாக அழாப்புவது போன்ற பல குறைபாடுகள் காலப்போக்கில் உணரப்பட்டன. அத்துடன் காலத்திற்குக் காலம் இவ்விளையாட்டின் சட்டதிட்டங்கள் மாற்றப்பட்டன. அந்தவகையில் புகும் திறமை கொண்ட அணி தொடர்ந்து புகுவதும் காக்கும் திறமையும் உண்டா என அறிய முடியாத நிலையில் ஒரு அணி வெற்றி பெறுவதும் சகஜம். இதனை எல்லாம் கருத்திற்கொண்டு தற்போது புதிய சில சட்ட திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இவ் விளையாட்டுக்கள் அதிகமாகக் கிராமப் புறங்களில் விளையாடப்படினும் தற்போது பாடசாலைகளில் 13 வயதிற்கு உட்பட்டோருக்கான நிகழ்ச்சிகளாகப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்று வருகின்றன.

இவ் விளையாட்டின் தற்போதைய சட்ட திட்டங்களாக

### 1-0. மைதான அமைப்பாக

1.1. மைதானத்தின் நீளம் 56 அடி, அகலம் 33 அடி.

1.2. இடையில் 4 சுவடுகள் காணப்படும்.

1.3. கிளி ஓடுவதற்கு 1 அடி அகலமான கரைச்சுவடுகள் இரண்டும், நடுச் சுவடு ஒன்றும் உண்டு.

1.4. கிளிச்சுவட்டின் முன் இருபக்கமும், பின் இருபக்கமும் 10 அடி நீளத்திற்குச் சற்று குறைவாக இருகோடுகள் காணப்படும்.

1.5.சுவடுகளிற்கிடையேயுள்ள பரப்புக்கள் தட்டுக்கள் எனப்படும்.

### 3.0 அணி வீரர்கள்

3.1. அணி ஒவ்வொன்றும் ஆறு விளையாட்டு வீரர்களைக் கொண்ட இரண்டு அணிகளுக்கிடையே இவ் விளையாட்டு நடைபெறும்.

3.2. மறிப்பவர் / காப்பவர் - இவர்கள் காவற்சுவடுகளில் நின்று காய்களையும் பழத்திற்காக இறங்குபவர்களையும் பழம் பெறவிடாது மறிப்பவர்கள்.

3.3. புகுவோர் - முதற் சுவட்டினூடாக பழம் எடுப்பதற்காக சுவடுகளைத் தாண்டிச் செல்வோர்.

3.4. கிளி முதற்சுவட்டில் நின்று காக்கவும், முதற் சுவடு, கடைச்சுவடு, கரைச்சுவடுகள், நடுச்சுவடு ஆகியவற்றில் ஓடி எதிரணியைப் பழம் எடுக்க விடாது தடுப்பவர்.

3.5 பதிலாட்டக்காரர்கள் - ஒவ்வொரு அணியும் 5 பதில் ஆட்டக்காரரின் பெயர்களை அணிப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம்.

### 4.0 உடை

4.1 ஒவ்வொரு அணியும் பொதுவாக பொருத்தமான சீருடை அணிதல் வேண்டும், கிளி தனியாக மற்றவர்களில் இருந்து வேறாக ஒரு நிறத்தில் சீருடைய அணிய வேண்டும்.

4.2. கிளி இலக்கம் 1 (ஒன்று) அணிய வேண்டும். காப்போர்கள் தங்கள் இலக்கங்களை முதற்சுவட்டில் 2 இலிருந்து ஒழுங்காக தங்களது சுவட்டு ஒழுங்குகளின்படி அணிந்திருத்தல் வேண்டும். தெளிவாக தெரியக் கூடியதாக மார்பிலும், முதுகிலும் இலக்கங்களை அணிய வேண்டும்.

### 5.0 ஆட்டம்

5.1. எவ் அணி புகுவது அல்லது காப்பது என நாணயச் சுழற்சி மூலம் தீர்மானிக்கப்படும்.

5.2. ஒரு போட்டி இரண்டு 15 நிமிட விளையாட்டு வேளைகளையும் ஒரு நிமிட இடைவேளையையும் கொண்டிருக்கும். 15 நிமிட விளையாட்டு வேளை ஒவ்வொன்றும் 7 நிமிட ஆட்டங்களைக் கொண்டிருக்கும் 1 நிமிடம் அணிகள் மாறுவதற்கு வழங்கப்படும் மொத்தமாக ஒரு போட்டியின் ஆட்ட வேளை 15-05-15 நிமிடங்கள்.

5.3. ஆட்டத்தில் முதல் புகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அணி முதல் 7 நிமிடங்களுக்கும் தொடர்ந்து மீண்டும் மீண்டும் புகுந்து கொண்டே இருப்பர். பின் அடுத்த 7 நிமிடத்தில் காப்போர் ஆக மாறுவர்.

5.4. இழந்த நேரம் (Loss of Time) ஆட்ட நேரத்தின் போது பிரத்தியேக காரணங்களுக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டால் அவ்வாறு இழந்தநேரம் பின் ஆட்டத்தில் சேர்க்கப்படும்.


5.5. சமநிலை தவிர்த்தலுக்கான அதிகரித்த நேரம் (Time of Extension For Tie Breaking)

பழமையான ஆட்ட முடிவில் பழங்கள் இரண்டு அணிக்கும் சமமாயின், மேலும் 5 நிமிடங்கள் ஒவ்வொரு அணியும் ஆட்டத்திலீடுபடும் எழுமாறாக புகுதல், மறித்தல் தீர்மானிக்கப்படும். பக்கம் மாறுவதற்கு இடைவேளை 1 நிமிடம் தொடர்ந்தும் சமநிலை காணப்படின் அதனைத் தவிர்க்க வேண்டுமாயின் அது பற்றி போட்டி ஒழுங்கமைப்பாளர்கள் முடிவு செய்வர்.

### 6.0 விளையாட்டு

6.1. இவ் விளையாட்டில் புகுதல், காத்தல், கிளி பாய்தல் ஆகிய மூன்று அம்சங்கள் உண்டு. அதாவது புகுதல் - கிளி சொன்னதும் முன் இடத்தில் உள்ள அணியின் ஆறு வீரரும் காய்களாகுவர். அடுத்துக் காய்கள் காவற் சுவடுகளைத் தாண்டிச் செல்ல இறங்குவர் இவ்வாறாக இறங்கும் போது காவற் சுவடுகளில் நின்று மறிக்கும் காப்போர் கையிலும் கிளிக்கோடுகளில் ஓடும் கிளியின் கையிலும் படாது காவற்சுவடுகளைத் தாண்டிச் செல்ல வேண்டும். இவ்வாறு சென்று மீண்டும் திருப்பி முதல் சுவட்டை தாண்டின் பழம் ஆகும்.

### 2.0 மைதான அமைவு



கோட்டின் அகலம் 1 அடி

6.2.புகுவோர் மறிப்பவருக்க மிகவும் அண்மையாக அங்கங்களைத் தொடக் கூடியவாறு நின்று விளையாடக்கூடாது.

6.3.புகுவோர் மறிப்பவருக்கு இடைஞ்சலாக இருக்கக்கூடாது.

6.4.புகுவோர் கிளியின் கரைச்சுவடுகளிலோ காவற்சுவடுகளிலோ மிதிக்கக் கூடாது.

6.5.ஒரே தட்டில் காயும், பழமும் சேர்வது தவறு.

### 7.0 மறித்தல்:

அடுத்து மறிக்கும் போது காப்போர் தனது சுவட்டிற்கு வெளியே கால் வைத்தல் தவறு. அத்துடன் ஒரு ஆட்டவேளையில் காப்போர் சுவடு மாற முடியாது.

7.2.காப்போர் புகுபவரை கைவளம் மாறி அடிக்கமுடியாது புகுவோரை சுவடு தாண்டும் போது மட்டும் அடிக்கலாம்.

### 8.0 கிளி

8.1. கிளிபாய்தல் ஆனது கிளி முதற் சுவடு, கடைச்சுவடு, கரைச்சுவடுகள், நடுச்சுவடு ஆகியவற்றில் நடமாடும் உரிமையுண்டு.

8.2. கிளியானது முதற் சுவட்டின் நடுவில் நின்று கிளி சொல்ல வேண்டும். அத்துடன் கிளி எனக் கூறியதன் பின் கிளி நடுச் சுவட்டில் மூன்றாம் கிடைச்சுவட்டின் சந்தியைத் தாண்டிய பின் அடிக்கும் உரிமையைப் பெறும். எனினும் சுவடுகள் விலகி அடிக்கமுடியாது கிளி எக்கையாலும் அடிக்கலாம். ஆனால் அடிப்பதற்கு வேறு அங்கங்களைப் பயன்படுத்தக்கூடாது.

### 9.0 பூட்டு ஏற்படும் சந்தர்ப்பம்

9.1. ஒரு தட்டில் ஒன்றிற்கு மேற்பட்ட காய்கள் நின்று காக்கப்பட்டால் காய்ப்பூட்டாகும்.

9.2. ஒரு தட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட பழங்கள் நின்று காக்கப்பட்டால் அது பழப் பூட்டாகும்.

9.3. காய்கள் பழங்கள், குத்தெதிர்த் தட்டுக்ககளில் நெத்துமாறி நிற்கும் போது கிளி நடுக்கோட்டில் தரித்து நின்று அமைக்கும் தடுப்பு தெத்துப்பூட்டு ஆகும்.

### 10.0. புறக்கோடு

10.1. காயோ, பழமோ கிளியின் கரைச்சுவடுகளை முன் பின் விடத்தைகளின் மூலைக் கோடுகளை மிதித்தல் (தொடுதல்) அவற்றிற்கு அப்பால் செல்லுதல் தவறாகும்.

### 11.0 ஆட்டம் இழக்கும் சந்தர்ப்பம்

11.1. காய் அல்லது பழம் காப்பவரால் அல்லது கிளியால் விதிகளுக்கமைய அடிபட்டால்.

திருமதி. ஜா.தர்மஜீலன்

11.2. பூட்டு ஏற்பட்டு உடையாது இருப்பின்.

11.3. காயும் பழமும் சேர்ந்தால்.

11.4. கோடு ஏறினால்.

11.5. புறக்கோடு ஏறினால்

11.6. தீர்ப்பாளர் ஆட்டம் இழந்தவர்களாக கருதும் சந்தர்ப்பங்களில்.

### 12.0 பொது விதிகள்

12.1. ஏனைய வீரர்களுக்கு ஊறுவிளைவிக்கும் எதனையும் வீரர்கள் அணியக் கூடாது.

12.2. அணியைச் சேர்ந்தவர் எவராவது எச்சரிக்கைக்குரிய தவறு இழைக்குமிடத்து தீர்ப்பாளர் எச்சரிப்பார். முதல் ஒரு தடவை எச்சரிக்கை பெற்றவர் மீண்டும் எச்சரிக்கைக்குரிய தவறு செய்வாராயின் ஆட்டத்திலிருந்து நீக்கப்படுவார்.

12.3. ஆட்டத்தில் தீர்ப்பாளரின் முடிவே இறுதியானது.

# எரிக்சொல் ஹெய்மின் குற்றச்சாட்டு குறித்து அரசாங்கம் விசாரணை

இராணுவத்தால் தமிழர்கள் சித்திரவதை செய்யப்படுவதாக நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் தெரிவித்திருந்த குற்றச்சாட்டு தொடர்பாக இலங்கை அரசாங்கம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தியாவின் தெகல்ஹா இணையத் தளம் ஒன்றுக்கு அண்மையில் நேர்காணல் அளித்திருந்த எரிக்சொல்ஹெய்ம் இலங்கை இராணுவத்தினரது சித்திரவதையால் இலங்கையிலிருந்து வெளியேறி தென்னிந்தியாவின் தமிழ்நாட்டுக்கு ஈழத் தமிழர்கள் செல்வதாகத் தெரிவித்திருந்தார்.

தமிழர்கள் சித்திரவதை செய்யப்படுவதை போர் நிறுவத்தக் கண்காணிப்புக் குழுவும் உறுதிப்படுத்தியுள்ளதாக எரிக்சொல்ஹெய்ம் அந்த நேர்காணலில் குறிப்பிட்டிருந்தார்.


எரிக்சொல்ஹெய்மின் இக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் விசாரணைகளை மேற்கொண்டிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

## கல்விச் சுற்றுலா

முகாமைத்துவ கற்கை நெறிக்கான கல்விச் சுற்றுலாவொன்றை மேற்கொண்டு வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்கள் அண்மையில் இந்தியா சென்றிருந்தனர்.

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கே.குமாரவேல் பிள்ளை தலைமையில் சென்ற இக்குழுவினரில் மன்னார், வவுனியா, திருகோணமலை, அம்பாறை, முல்லைத்தீவு, யாழ்ப்பாண மாவட்டங்களைச் சேர்ந்த மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர். (க-7)

137வது மைல்கல்





வெப்பம் நிறைந்த காலநிலை. உலர்ந்த மணல் சேர்ந்த மண்வளம். அதனால், தென்னை, மா, வெங்காயம், நெற்செய்கைக்கு ஏற்ற நிலமான யாழ்ப்பாணம், இங்கு வாழ்வோரின் பொருளாதாரத்தையும், வாழ்க்கைப் பின்னணியையும் உயர்த்த, அயராத முயற்சி செய்து வருகிறார்கள்.

இலங்கையில், வங்கித்துறையின் தேவையானது அகன்று செல்வதனால், வாடிக்கையாளரின் பணம் சார்ந்த பற்பல தேவைகளும் அதிகரித்துள்ளது. இவ்வாறு யாழ் வாழ் மக்களின் நிதித்தேவையும் அதிகரித்துள்ளது. எனவே, கொமர்ஷல் வங்கியின் சேவை மென்மேலும் தேவைப்படுகிறது. 1930 காலப்பகுதியில் இருந்து வரலாற்றைக் கொண்டுள்ள கொமர்ஷல் வங்கிக்கு தோள் கொடுத்து உதவுவதற்காகவும், தேவைகளை நிறைவேற்றும் செயற்றிறனை அதிகரிக்கவும், கூடுதலான மக்கள் சேவையை வழங்கவும் கொமர்ஷல் வங்கியின் புதிய சேவை நிலையம் யாழ் நகரில் இல.62/6, ஸ்டான்லி வீதியில் திறந்து வைக்கப்படுகிறது.

ஸ்டான்லி வீதி, இலக்கம் 62/6 இல் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கியின் இந்தச் சேவை நிலையம், 2006 ஏப்ரல்- மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்கிழமை காலை 09.00 மணிக்கு சுபவேளையில் திறந்து வைக்கப்படும். இதில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கிறோம்.

தொலைபேசி (முகாமையாளர்) 021-2229820 (பொது) 021-2229821 (தொலைநகல்) 021-2229825

(C/அ/277)

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

# பெருமை சேர்க்க நினைத்தவர்களின் 'சேட்டை'யால் பதவியை பறிகொடுத்து சிறுமை அடைந்த சோனியா

(புதுடில்லி)

**தேசிய ஆலோசனை கவுன்சில் தலைவர் பதவி என்பது காங்கிரஸ் தலைவர் சோனியாவை திருப்திப்படுத்த, கௌரவப்படுத்த உருவாக்கப்பட்ட பதவி. ஆனால் சோனியாவுக்கு பெருமை சேர்க்க காங்கிரஸ் தலைவர்கள் சிலர் செய்த செயலே அவருக்கு சிறுமையை ஏற்படுத்திவிட்டது. இராஜினாமா என்ற படுகுழியில் தள்ளிவிட்டது.**



மத்தியில் 2004 ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி ஏற்பட்டது. அப் போது பிரதமர் பதவி யை வேண்டாம் என சோனியா கூறினார். இதையடுத்து மன் மோகன்சிங் பிரதம ராக பதவியேற்றார். அந்த நேரத்தில் லோக் சபா எம்.பி.யாக மட்டுமே சோனியா இருந் தார்.

எம்.பி.யாக மட்டும் இருந்தால் லோக் சபாவில் பின் வரிசையில் தான் சோனியா அமரவேண்டும் என்ற சூழ்நிலை உருவானது. இந்த நேரத்தில்தான் குலாம் நபி ஆசாத், சீதாராம் யெசூரி, ஜெய்ராம் ரமேஷ் ஆகி யோரின் மூளையில் உதித்தது புதிய யோசனை.

மத்திய அரசு செயல்பட குறைந்தபட்ச தேசிய செயல்திட்டம் உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டம்முறையாக செயல்படுத்தப் படுகிறதா என்பதை கண்காணிக்க ஒரு அமைப்பை ஏற்படுத்தலாம். அந்த அமைப் பின் தலைவராக சோனியாவை நியமித்து விடலாம் என்று இந்த மூவரும் தங்கள் கருத்தை சோனியாவிடமும், பிரதமர் மன்மோகன்சிங்கிடமும் கூற, அதன் பெயரில் உருவாக்கப்பட்டதே தேசிய ஆலோ சனை கவுன்சிலும், அதன் தலைவர் பதவியும்.

சோனியா தலையை ஆட்டிய உடன் அந்தப் பதவிக்கு மத்திய அமைச்சர் அந்தஸ்து அளிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதற்காக மத்திய அமைச்சரவை கூடி அவசர அவசரமாக முடிவுகள் எடுக்கப்பட்டன. பிரதமர் அலுவலகத்தை விட தேசிய கவுன் சில் தலைவர் பதவி உயர்ந்தது என்ற நிலை ஏற்படுத்தப்பட்டது.

லோக்சபாவில் மத்திய கபினட் அமைச் சர்கள் அமரும் இருக்கைகளில் வேறு எவரும் அமரமுடியாது. அமைச்சர்கள் ஜனாதிபதியால் பதவி பிரமாணம் செய்து வைக்கப்பட்டவர்கள். கவின கபினட் அமைச் சர்கள் அமரும் பகுதியில் சோனியா அமர வேண்டும் என்று அடுத்த திட்டத்தை போட்டனர்.

இதற்காக பார்லிமென்ட் விதிமுறைகள் புத்தகத்தில் திருத்தம் மேற்கொள்ளப் பட்டது. சோனியா மத்திய அமைச்சரும் இல்லை, ஜனாதிபதியால் பதவி பிரமாணம் செய்து வைக்கப்பட்டவரும் இல்லை இரகசிய உறுதிமொழியையும் ஏற்றவரும் இல்லை.

இருப்பினும் அவரை கபினட் அமைச்சர்க ளுக்கான இருக்கையில் அமரவைக்க அனைத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதற்கான யோசனையை தெரிவித்தவர் ஜெய்ராம் ரமேஷ்.

அதன்படியே அமைச்சரவையும் தீர்மா னத்தை நிறைவேற்றி தனது விசுவா சத்தை காட்டிக்கொண்டது. இந்தத் தீர்மானம் லோக்சபா சபாநாயகர் சோம்நாத் சட்டர் ஜியின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. இந்த நேரத்தில் பார்லிமென்ட் விவகார அமைச்சராக இருந்தவர் குலாம் நபி ஆசாத், தனது சோனியா விசுவாசத்தை காட்ட புதிய நடைமுறையை புகுத்தினார்.

சோனியாவை முதல்வரிசையில் அமர வைத்தாலும் எந்த சீட் அவருக்கு ஒதுக் கப்பட வேண்டும் என்பதில்தான் அவரது விசுவாசம் வெளிப்பட்டது. பொதுவாக லோக்சபாவில் புதிதாக எம்.பி.யாக தேர்வு செய்யப்பட்டவருக்கு கடைசி வரிசையில் தான் இருக்கை ஒதுக்கப்படும். அவர் எம்.பி யாவதற்கு முன் முதல்வராகவோ, மத்திய அமைச்சராகவோ, கவர்னராகவோ இருந்தி ருந்தால் முதல் இரண்டு வரிசைகளில் இடம் ஒதுக்கப்படும். முன்பு எம்.எல். ஏவாக இருந்திருந்தால் மூன்றாவது வரிசையில் இடம்ஒதுக்கப்படும். ஆனால் கபினட் அமைச் சர்கள் அமரும் பகுதியில் முதல் வரிசை யில் பிரதமருக்கு அடுத்த இருக்கையில் சோனியா அமர வேண்டும் என்பதே அவர் களது நோக்கமாக இருந்தது. அதன்படியே செய்து காட்டினர்.

இதற்கு அடுத்தபடியாக தேசிய ஆலோ சனை கவுன்சில் அலுவலகம் எங்கு செயல் படவேண்டும் என்ற முடிவு அமைச்சரவை யில்எடுக்கப்பட்டது. இதற்காக தேர்வு செய்யப்பட்ட இடம் எண்2, மோதிலால் நேருமார்க் என்ற முகவரியில் உள்ள பிரமாண்டமான பங்களா.

இந்த பங்களாவில் ம.தி.மு.க.வை சேர்ந்த எம்.கண்ணப்பன் இருந்து வந்தார். இவர் வாஜ்பாய் அரசில் அமைச்சராக இருந்தவர். அவரை உடனடியாக காலிசெய்ய வைக்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்தவர் குலாம் நபி ஆசாத்தே. அவர் வகித்து வந்த நகர மேம்பாட்டு துறை அமைச்சர் பதவி இதற்குப் பெரிதும் உதவி புரிந்தது.

சோனியாவுக்கு விசுவாசம் காட்ட பலரும் முயற்சி செய்தாலும், அதில் வெற்றி பெற றவர் குலாம் நபி ஆசாத்தே. பார்லி மென்ட் விவகார அமைச்சராக இருந்ததால் பிரதமருக்கு அடுத்த இருக்கையில் சோனி யாவை அவரால் அமரவைக்க முடிந்தது. நகரமேம்பாட்டு துறை அமைச்சகம் இவர் கையில் இருந்ததால் தேசிய ஆலோசனை கவுன்சில் அலுவலகத்துக்கு மிக துரிதமாக ஒரு பங்களாவை பிடித்து கொடுக்க முடிந்தது.

இவ்வளவு கஷ்டப்பட்டு மத்திய அமைச் சரவையால் உருவாக்கப்பட்ட தேசிய ஆலோ சனை கவுன்சிலுக்கு எந்தப் பொறுப்பும் இல்லையென்ற கௌரவத்தையும் அளித்தது. பொதுவாக ஒரு தீர்மானம் மத்திய அமைச் சரவையில் நிறைவேற்றப்பட்டால் அந்த தீர்மானம் குறித்த சாதக பாதக ங்களுக்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு உள்துறை, பணியாளர் நலன் அமைச்சகம், சட்ட அமைச்சகம் ஆகியவற்றுக்கு ஏற்பட்டு விடும். அவர்கள் மத்திய விஜி லென்ஸ் கமிஷன், இந்திய ஆடிட்டர் ஜெனரல் ஆகிய வற்றுக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும். மேலும்தீர்மானங்கள் குறித்து ஆண்டு தோறும் பார்லிமென்ட் விவகார அமைச் சகம் ஒரு அறிக்கை தாக்கல் செய்ய வேண் டும். ஆனால் தேசிய ஆலோசனை கவுன் சிலுக்கு இந்தப் பொறுப்பு எல்லாம் கிடை யாது.

சோனியாவிடம் நல்லபெயர் எடுக்க இந்த அளவுக்கு பார்த்துப் பார்த்து செய்த வர்கள், அந்தப் பதவி ஆதாயம் தரும் பதவியின் கீழ் வருகிறது என்பதை கவனிக் கத் தவறிவிட்டனர்.

இதையடுத்து இரண்டே ஆண்டுகளில் அந்தப் பதவியே சோனி யாவுக்கு படு குழியாகி லோக்சபா எம்.பி மற்றும் தேசிய ஆலோசனை கவுன்சில் தலைவர் பதவி ஆகியவற்றை இராஜினாமா செய்யும் அளவுக்கு சென்றுவிட்டது. (கு)

இந்திய வலம்

# நிலையான ஆட்சியை காங்கிரஸால் மட்டுமே தரமுடியும் - இந்தியப் பிரதமர்

(தேஜ்பூர்)

'அசாமில் நிலையான ஆட்சியை காங்கிரஸ் கட்சியால் மட்டுமே தரமுடியும்' என தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்தார்.

நேற்றைய தினம் முதற்கட்டமாக நடை பெற்ற அசாம் மாநில சட்டசபை தேர்தல் வரும் பத்தாம் திகதி இரண்டாம் கட்டமாக நடைபெறவுள்ளது. அரசியல் கட்சிகள் உச்சகட்ட பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன. இதேவேளை ஆளும் காங்கிரஸ் கட்சி ஆட்சியை தக்கவைத்துக்கொள்ளும் வகை யில் கட்சியின் முக்கிய தலைவர்களை அசாமிற்கு அனுப்பிவைத்துள்ளது.

நேற்று முன்தினம் கர்பிஅங்கலோங் மாவட்டம் உள்ள டொக்காம் கோம், சோனிப்பூர் மாவட்டம் தேஜ்பூர் ஆகிய இடங் களில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டங் களில் பிரதமர் மன்மோகன்சிங் கலந்து கொண்டார்.

அவர் அங்கு பேசுகையில், கர்பிஅங் கோ லாங் மாவட்டத்தில் நடந்த வன்முறைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்ட அனைவ ருக்கும் இழப்பீட்டுத் தொகை வழங்கப் படும்.

இச்சம்பவத்தில் இறந்தவர் களின் குடும்பத்திற்கு போதிய நிதியுதவி அளிக் கப்படும். இந்த மாவட்டத்தின் ஒட்டு மொத் த வளர்ச்சிக்கு காங்கிரஸ் கட்சி முன் னுரி மையளிக்கும். வளர்ச்சிப் பணிகள் விரை வுபடுத்தப்படும். அசாமில் எதிர்க் கட்சி கள் பல பிரிவுகளாக சிதறிப் போயுள் ளன. அவர்களுக்குள் ஒற்றுமை யில்லை. தற்போதுள்ள நிலையில் காங்கிரஸ் கட்சி மட்டுமே அசாமில் நிலையான ஆட்சியைத் தரமுடியும். கடந்த 5ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் மாநிலத்தில் பல்வேறு வளர்ச் சிப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்த வளர்ச்சிப் பணிகள் தொடரும். விவசாயம், கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் சிறப்புக் கவனம் செலுத்தப் படும்.

காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந் தால் மாநிலத்தின் அனைத்துப் பகுதிக ளிலும் அடுத்த 5 ஆண்டுகளில் விரைவான வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். மத்திய அரசு, மாநில அரசுடன் இணைந்து தேயிலைத் தொழில் வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

தீவிரவாதத்தை விட்டு விலகி வரும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு சிறப்புத் திட்டம் தீட்டப்படும். எல்லைதாண்டி ஊடுருவும் செயல் இங்கு முக்கிய பிரச்சினையாக உள்ளது. இத்னைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

முதல்வர் தருண் கோகோய் தலை மையில் மாநிலத்தை பலப்படுத்துவதற்காக சோனியா என்னை இங்கு அனுப்பியுள் ளார். அசாம் கண பரிஷத் கட்சியினர் மாநி லத்தில் ஆட்சியிலிருந்தபோது, வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்துவதில் தோல்வி அடைந்துவிட்டனர் என்று மன்மோகன் சிங் பேசினார். (கு)

# 5 மாநில தேர்தல்களில் ஆட்சியை தக்கவைக்க காங்கிரஸ் கடும்பிரயத்தனம்

(புதுடில்லி)

ஐந்து மாநில சட்டசபைத் தேர்தல்கள் காங்கிரஸ் கட்சிக்கு கடும் சோதனையாக வுள்ளது. கேரளா, அசாம் மற்றும் புதுச் சேரி ஆகிய மாநிலங்களில் ஆட்சியைத் தக்கவைப்பதற்கு அக்கட்சி கடுமையாக பிரயத்தனம் செய்கிறது.

தமிழகம், புதுச்சேரி, கேரளா தமேற்கு வங்கம் மற்றும் அசாம் ஆகிய ஐந்து மாநி லங்களில் சட்டசபைத் தேர்தல் நடக்கவுள் ளது. தமிழகத்தில் அ.தி.மு.கவும் மேற்கு வங்கத்தில் மா.கம்யூனிஸ்டும் ஆட்சி நடத் துகிறது.

இந்த மாநிலங்களில் காங்கிரஸ் கட்சிக்கு பெரியளவிலான செல்வாக்கு இல்லை. ஆதாயம் தரும் பதவி பிரச்சினை காரண மாக திடீரென்று எம்.பி பதவியை உதறிய தால் மக்கள் மத்தியில் தனக்குக் கிடைத் துள்ள வரவேற்பால் உற்சாகமடைந் துள்ள சோனியா தேர்தல் சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ளார்.

முதலில் அசாமில் தனது தேர்தல் பிரசாரத்தை துவக்கியுள்ள சோனியா பிரமாண்டமான பொதுக்கூட்டங் களில் பேசினார். புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் அவரது சுற்றுப் பயண நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு வரு கிறது.

## அசாமில்...

அசாமில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. இங்கு நேற்று முதல் கட்ட தேர்தல் நடந்தது. கடந்த தேர்தலில் முஸ்லிம்கள் ஆதரவினால் காங்கிரஸ் கட்சி ஆட்சியைப் பிடித்தது.

அசாமில் வெளி மாநிலத்தவரை கண்டுபிடித்து வெளியேற்றும் சட்டம்கொண்டு வரப்பட்டதனால் முஸ்லிம்கள் அதிருப்திய டைந்துள் ளனர்.

12 முஸ்லிம் அமைப்புகள் சேர்ந்து ஐக்கிய ஜனநாயக முன்னணி என்ற அமைப்பை ஏற்படுத்தி 126 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளனர். இது காங்கிரஸ் கட்சிக்கு பின்னடைவை ஏற்படுத் தியுள்ளது. முக்கிய எதிர்க்கட்சியான அசாம் கண பரிஷத்தில் பிளவு ஏற்பட்டு முன்னாள் பிரதமர் பிரபுல்லா குமார்மகந்தா புதுக் கட்சியைத் துவக்கியுள்ளார்.

இதனால் பல முனை போட்டி ஏற்பட்டு காங்கிரஸ் கட்சி யின் ஆட்சிக் கனவை தகர்ப்பதோடு சட்ட சபையில் எந்தக் கட்சிக் கும் மெஜாரிட்டி கிடைக்காமல் தொங்கு சட்டசபை ஏற்பட வழிவகுத்துவிடும்.

## கேரளாவில்...

கேரளாவில் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் என ஒவ்வொரு கட்சிகளின் ஆட்சி மாறிமா றியே நடந்துவந்துள்ளன. எந்தக் கட்சியும் தொடர்ந்து இரண்டு முறை ஆட்சியில் இருந்ததில்லை. தற்போது காங்கிரஸ் ஆட்சியில் இருக்கிறது. எனவே, இம்முறை ஆட்சியைப் பிடிக்கப் போவது கம்யூனிஸ்ட் கட்சிதான் எனக் கூறப்படுகிறது.

தமிழகத்தில் எதிர்க்கட்சியான தி.மு.க தலைமையிலான கூட்டணியில் காங்கிரஸ் உள்ளது. இந்தக் கூட்டணியில் இருந்த வை கோ தலைமையிலான ம.தி.மு.க., ஆளும் அ.தி.மு.க கூட்டணியில் சேர்ந்ததால் இக்கூட்டணி பலம் குறைந்ததாகக் கருதப் படுகிறது.

தமிழகத்தில் மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சிக்கு 48 தொகுதிகள் கூட்டணியில் ஒதுக்கப்பட்டுள் ளது.

தி.மு.க.கூட்டணி சக்தி மிகுந்த கூட்டணி என்றும் வை கோ அணி மாறியதால் கூட்ட ணிக்குபெரியபாதிப்புஎதுவுமில்லை. முதல்வர் ஜெயலலிதா, வை கோவை 'பொடா' சட்டத்தில் சிறையிலடைத் தார். தற்போது அ.தி.மு.க கூட்டணியில் அவர் சேர்ந்துள்ள தால் அவருக்கு பொது மக்கள் மத்தியில் இருந்த மதிப்பு கணிச மாக குறைந்து விட்டது என்று காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## மேற்கு வங்கத்தில்...

மேற்கு வங்கத்தில் ஏழாவது முறையாக ஆட்சியைக் கைப்பற்ற மா.கம்யூனிஸ்ட் முயன்று வருகிறது. கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக பல கட்சிகளைக் கொண்ட மிகப் பெரிய கூட்டணியை திரிணமூல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி உருவாக்கியுள் ளார்.

இந்தக் கூட்டணியில் காங்கிரஸ் சேரா ததால் மா.கம்யூனிஸ்டுக்கு எதிரான வாக் குகள் சிதறி மீண்டும் அக் கட்சியே ஆட்சி யைப் பிடிக்கும் சூழ்நிலை உருவாகியுள் ளது.

புதுச்சேரியில் தி.மு.க., காங்கிரஸ் ஆகிய கட்சிகளே மாறி மாறி ஆட்சி நடத்தி வந் துள்ளன. கடந்த தேர்தலில் காங்கிரஸ், த.மா.கா. கூட்டணி மொத்தம் உள்ள 30 தொகுதிகளில் 13 தொகுதிகளை கைப்பற்றி ஆட்சியைப் பிடித்தது. இந்தத் தேர்தலில் காங்கிரஸ், திமுக கவட்டணி வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்கும் எனத் தெரிகிறது. (கு)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை

### ஹாரே கல்லூரியில்..... 7



ஹாரே கல்லூரி ஸ்காட்லாந்துப் பாதிரியார்களால் நடத்தப்பட்டு வந்தது. ஹாரே கோட்டை சோசா இன மன்னர்கள் கோட்டை கட்டி ஆண்டு வந்த இடம் 1600 முதல் வெள்ளையர்களுடன் பல வீரர்கள் மன்னர்கள் போர் நடத்தி இறவாப் புகழ் பெற்றுள்ளனர். இருப்பினும் 1800இல் நடந்த கடைசிச் சண்டையில் வெள்ளையர்கள் தங்களிடமிருந்த நவீன ஆயுதங்களைக்கொண்டு சோசா மன்னர்களை வென்று கோட்டையைக் கைப்பற்றினர். பின்னர் அங்கிருந்த மக்களைத் துரத்தியடித்து விட்டு எல்லா நிலத்தையும் வெள்ளையர்கள் பங்கிட்டுக் கொண்டனர். இப்பொழுது கோட்டை மட்டும்தான் காட்சிக்கு நிற்கிறது. கருப்பு நிற மனிதர்கள் இந்த நகரில் அடையாளத்துக்குக் கூட இல்லை. இந்தக் கல்லூரியில் 150 மாணவர்கள்தான் பயின்று வந்தனர்.

மண்டேலாவுக்கு இது ஒரு புது உலகமாகத் தோன்றியது. கல்லூரியை நிறுவி முதல்வராக இருந்தவர் டாக்டர் கெர். இதே கல்லூரியில் பேராசிரியர் ஜபாவு இருந்தார். இவர் லண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திடமிருந்து ஆங்கிலப் புலமைக்கு டாக்டர் பட்டம் பெற்ற முதல் ஆப்பிரிக்கர். இவரிடம் பயிலும் பேற்றினைப் பெற்றார் மண்டேலா.இவருககு சோசா என வரலாறு தண்ணீர் பட்ட பாடு மண்டேலாவின் தந்தையைப் பற்றி மண்டேலாவுக்கு தெரியாதிருந்த பல விவரங்களை இவர் சொன்னாராம்.

இந்தக் கல்லூரியில் படிக்கும் போதுதான் நீண்ட தூரம் ஒடுவது கால் பந்து விளையாட்டில் பங்கெடுப்பது என்பதனுடன் குத்துச் சண்டையிலும் பங்கெடுக்கத் தொடங்கினார். தொடக்கத்தில் மண்டேலா குத்துச் சண்டையில் மிளிரவில்லை உடல் எடை பெருத்த பிறகுதான் அதில் தன் திறமையைக் காட்டத்தொடங்கினார். அது அவருக்குக் கடைசிவரை பேருதவியாக, பேராயுதமாக இருந்தது.

மாதா கோயிலுக்குப் போய் பிரார்த்தனை செய்வதுடன் சுற்றுப்புறக் கிராமங்களுக்குச் சென்று மதப் பிரச்சாரம் செய்வதற்கும் மாணவர்கள் சென்று வந்தனர். சுருங்கக் கூறினால் அரசுக்கு அடங்கி ஒத்துழைக்க வேண்டும்; வெள்ளையர் நாகரிகம், ஆட்சி முறை, வாழ்க்கை முறை மிக மிகச் சிறந்தது. என்ற உணர்வுகளில்தான் மாணவர்கள் வளர்க்கப்பட்டனர்.

இங்கிருந்த போது மிக்கன் டிக்கானே என்ற உறவுக்கார மாணவருடன் பழகும் வாய்ப்புக் கிட்டியது அவருடன் சேர்ந்து ஆபிரகாம் லிங்கனைப் பற்றிய வாழ்க்கையை நாடகமாக நடித்தனர்.

மிக்கன் டிக்கானே லிங்கனாக நடித்தார். லிங்கனைச் சுட்டுக்கொன்ற வில்கியாக மண்டேலா நடித்தார். லிங்கனின் உலகப் புகழ்பெற்ற கெட்டிஸ்பர்க் சொற்பொழிவை மிக்கன் டிக்கானே பேசியபோது பலத்த கைத்தட்டல் கிடைத்தது. கொலைகாரனாக நடித்தாலும் நல்லது செய்ய முயற்சிக்கும் நல்ல மனிதர்கள் தங்களது உயிரையும் தத்தம் செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்ற பாடம் மண்டேலாவின் நெஞ்சில் பதிந்தது.

இங்கு கல்லூரிப் பட்டப்படிப்பை முடிக்கும் முன்னரே கல்லூரியிலிருந்து முதல்வரால் வெளியில் அனுப்பப்பட்டார் மண்டேலா. இங்கு படிக்கும் மாணவர்கள் தேறியவுடன் அரசு இலாகாக்களில் மாஜிஸ்திரேட்டுகளுக்கு மொழி பெயர்ப்பாளர்களாகப் பணிபுரிவதை பெரிய லட்சியமாகக் கொண்டு இருந்தனர். மண்டேலாவும் அதே போலத்தான் ஆசைப்பட்டார். அம்மாவுக்கு வீடு, தோட்டம் வாங்கிக் கொடுத்து அப்பா வாழ்ந்த காலத்தில் இருந்த சௌகரியத்தை ஏற்படுத்தித்தரவேண்டும் என மண்டேலா ஆசைப்பட்டார்.

ஆனால் விடுதியை கவனிக்கும் மாணவர் குழுவுக்குத் தேர்தல் நடந்ததில் எழுந்த பிரச்சினையால் மண்டேலா கல்லூரியை விட்டு வெளியேற்றப்பட்டார் முற்றிலுமாக "டிஸ்மிஸ்" செய்யப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பை ராஜினாமா செய்தார் மண்டேலா. அவருடன் அறுவரும் ராஜினாமா செய்தனர். இதைத்திரும்பப் பெறுமாறு முதல்வர் அறிவுரை கூறினார் இதை மண்டேலா மறுத்தார்... "நீ நன்றாக யோசித்து முடிவை மாற்றிக்கொண்டால் திரும்பி வா இல் லையேல் விடை தந்தேன்... " எனக் கூறினாராம்.

அவர் ஆசைப்பட்ட பட்டப் படிப்பை முடிக்காமல் வீடு திரும்பினார். இதைக் கேள்விப்பட்ட ரீஜண்ட் கொதித்துப் போனார். திரும்பப் போய் மன்னிப்புக்கேட்டு படிப்பைத் தொடரச் சென்னார்.

மண்டேலா மசியவில்லை சிந்திப்பதாகக் கூறிக்காலத்தைக் கழித்துவந்தார். உலகத்தையே எதிர்த்தாலும் தன் குடும்பத்தலைவரை எதிர்க்கும் நினைப்பே வரவில்லையாம்.

ஹாரேக்கு வந்த பிறகுதான் அதுவும் பட்டப்படிப்புப் படிக்கிற போதுதான் சாம்பலால் பல் தேய்ப்பதைக் கைவிட்டு பற்பசை பல் தேய்க்கும் பிரஷ் வைத்துப் பல் தேய்க்கவும் குழாயிலிருந்து துளித்துளியாகக் கொட்டும் நீரில் சுடச்சுடக் குளிப்பதும், குளிக்கிற சோப்பை முதன் முதலாகப் போட்டுக்கொள்ளவும் ஆரம்பித்தாரம் மண்டேலா.

இந்தப் பயிற்சிகளோடு ஹாரேக்கு விடுதலை தந்து விலகி வந்து விட்டார் மண்டேலா.

### மீண்டும் முக்கேஸ்வேனியில்

ஹாரேயிலிருந்து முதல்வரால் அனுப்பப்பட்டு வீட்டிற்குத் திரும்பி வந்த மண்டேலாவுக்கு ரீஜண்ட் கோபத்துடன் புத்திமதி சொல்லி வந்தார். தன் கனவு திட்டம் எல்லாவற்றையும் கெடுத்து விட்டதாகச் சாடினார். இதே காலத்தில் பள்ளிப்படிப்பை முடித்து விட்டு கேப் நகரில் குடியிருந்து வந்த ரீஜண்டின் மகன் ஜஸ்டிசும் ஊருக்குத் திரும்பி வந்தார். இருவரும் மீண்டும் சகோதர பாசத்துடன் உறவு கொண்டு வாழத் தலைப்பட்டனர்.

ஒரு நாள் இருவரையும் ரீஜண்ட் அருகில் வரவழைத்து தான் உலகில் நீண்ட நாட்கள் வாழப் போவதில்லை என நினைப்பதாகவும் எனவே இருவருக்கும் நல்ல பெண்களைப் பார்த்துத் திருமணம் செய்து வைத்து விடலாம் எனக் கருதுவதாகவும் சொன்னார். இந்த எதிர்பாராத திடீர் அறிவிப்பு இருவரையும் கலங்கடித்தது ஜஸ்டிசுக்கு தெம்பு இனக் குழுத் தலைவர் ஒருவரின் மகளையும் மண்டேலாவுக்கு உள்ளூர் கோயில் குருவின் மகளையும் பேசி முடித்து விட்டதாகவும் சோசா இன மரபுப்படி ஜஸ்டிசுக்கு சோசா சமுதாயத்தினர் பெண்ணுக்கான பரிசப் பணத்தைக் கட்டுவார்கள் என்றும் மண்டேலாவுக்கான பரிசப் பணத்தைத் தான் கட்டிவிட்டதாகவும் கூறி எல்லாம் முடிந்தது என்பது போலச் சொல்லிவிட்டார்.

(தொடரும்)

## தவக்கால சிந்தனை

ஆண்டவரே! என் மன்றாட்டைக் கேட்டருளும் என் அபயக்குரல் உம்மிடம் வருவதாக!

இயேசுவின் சிந்தனையும் செயலும் தனது குறிக்கோளை நோக்கியே இருந்தது. தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதே அவரின் குறிக்கோள் "மனிதனை உயர்த்திய பின் நாமே இருக்கிறவர் என்று அறிவீர்கள்" என்று கூறும் நம் தேவன் என்றும் மாறாதவர். மனங்களை ஊடுருவி பார்க்கக்கூடியவர் அதனால் உங்கள் பாவத்திலே மடிவீர்கள்" என்று வெட்ட வெளிச்சமாக கூறி நம் மனச்சான்றைத் தட்டுகிறார். விண்ணையும் மண்ணையும் இணைக்க வந்த பரமன் இயேசுவின் பாதச் சுவட்டில் பாவத்தை விலக்குவோம். பண்புடைய மனிதராக மற்றவர் வாழ்வில் நம்பிக்கை தீபத்தை ஏற்றக் கூடியவர்களாக மாறுவோம். நம்மை வாழ்வில் உயர்த்தத் தன்னையே சிலுவையில் உயர்த்திக் கொண்ட இயேசுவின் எல்லையற்ற நன்மைத்தனம் நம்மிடம் வெளிப்பட வேண்டும் அல்லவா?

காவலன்

## உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றியீட்டிய

# தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் தளபதி சொர்ணத்துடன் சந்திப்பு





(திருகோணமலை)

திருகோமலை மாவட்டத்தில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் வெற்றியீட்டிய இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் மூதூர் கடற்கரைச்சேனை பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் , இராணுவத்தளபதி வசந்தன் , திருமலை அரசியல்துறைப்பொறுப்பாளர் எழிலன், மாவட்ட விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர் தீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தச் சந்திப்பில் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் ஆகியோர் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற இலங்கைத் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களிற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டனர்.

மேலும் இச் சந்திப்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற கூட்டமைப்பு உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்தும் இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டது. (க)

## அரச பேச்சுக்குழுவின் கூட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் பேச்சுக்குழுக்கூட்டம் நாளை புதன் கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது. அலரி மாளிகையில் இக்குழுவின் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு நிமால் சிறிபால டி சில்வா தலைமை வகித்தார். ஜெனீவாவில் நடைபெறவுள்ள அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் தொடர்பாக விவாதிக்க இக் கூட்டம் கூட்டப்பட்டது.

கூட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் இந்திய தூதுவரைத் தான் சந்திக்கச் செல்வதாகக் கூறி நிமால் சிறிபால டி சில்வா வெளியேறிவிட்டார். இதையடுத்து வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ யுத்த நிறுத்த ஒப்பந்ததால் அரசாங்கத்துக்கு எதுவித பயனும் இல்லாத போது ஏன் நாம் அதை கடைபிடிக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பினார்.

இந்தக் கூட்டத்தில் எதுவித இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை நாளை மீண்டும் கூடுவது என்று மட்டும் முடிவு செய்யப்பட்டது. (க)



பாக்தாத்தில் ஈராக் அதிபரை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் காண்டலிசாரைஸ் சந்தித்து பேசினார்.

# ரஷ்ய சோயுஸ் விண்கலம் ஆய்வு நிலையம் சென்றது

ரஷ்ய சோயுஸ் விண்கலம் சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்துக்கு வெற்றிகரமாக சென்றடைந்தது. நாசா அமைந்துள்ள சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தில் விண்வெளி வீரர்கள் குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை மாற்றப்படுகின்றனர்.

விண்வெளி ஆய்வு நிலையத்துக்குத் தேவையான பொருட்கள் மற்றும் விண்வெளி வீரர்களை அழைத்துச் செல்லும் பொறுப்பை ரஷ்யா ஏற்றுள்ளது. இவ் விண்கலத்தில் பிரேசில் சார்பில் முதல் முறையாக விண்வெளி வீரர் செல்வதால், அவர் பிரேசில் கால்பந்து அணியின் உடையை அணிந்து சென்றுள்ளார்.

இவ் விண்கலம் கடந்த 30ஆம் திகதி சகஸ்தானிலுள்ள பைகானூர் ஏவுதளத்திலிருந்துபுறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(து-7)

# அமெரிக்க ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டது

(அமெரிக்கா)

அமெரிக்க ஹெலிகொப்டரொன்றை பக்தாத்துக்கு தென் மேற்கில் சுட்டு வீழ்த்தியதாக ரசோடீன் இராணுவம் என்ற அமைப்பு உரிமை கோரியுள்ளது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்பது இதுவரை தெரியவில்லை. சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற் றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஹெலி கொப்டர் சுட்டுவீழ்த்தப்பட்ட யூகபியா பகுதி மக்கள், சூட்டுச் சத்தங்கள் கேட்டதாக தெரிவித்துள் ளனர். (கு-7)

உலக தரிசனம்

# இந்தோனேஷியாவில் நிலநடுக்கம்


இந்தோனேஷியாவில் கடந்த சனிக்கிழமை மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது கட்டடங்கள் அதிர்ந்தன. மக்கள் பீதியால் வீடுகளைவிட்டு வெளியேறி வீதிகளிலும் மைதானங்களிலும் நின்றனர்.

இந்தோனேஷியாவிலுள்ள தலாடு தீவில் இந்த நடுக்கம் ஏற்பட்டது-இது ரிக்டர் அளவு கோளில் 6.0 புள்ளிகளாக பதிவாகியுள்ளது இந்த விபரங்கள் உடனடியாக வெளியாகவில்லை.

இதேவேளை ஈரானின் மேற்குப் பகுதியிலும் கடந்த சனிக்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது. முதல் நாளான கடந்த வெள்ளிக்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்ட அதே பகுதியிலேயே இந்நிலநடுக்கம் ஏற்பட்டது. தேசவிபரங்கள் வெளியாகவில்லை.

தாய்வானிலும் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிக்டர் அளவில் 6.4 புள்ளிகளாக பதிவாகியுள்ளது.

இதனால் தாய்வானின் தலைநகரான தைவே காவியூஸ் ஆகிய இடங்கள் உட்பட பல்வேறு இடங்களில் கட்டடங்களும் வீடுகளும் குலுங்கின. கிழக்குப் பகுதியில் தொலைபேசி இணைப்புகள் அடியோடு செயலிழந்தன. (கு-9)



ஜப்பானில் செர்ரிப்பழம் காய்க்கும் காலம் துவங்கி விட்டது. செர்ரி மரத்தின் அடியில் நின்றபடி மலரும் பூக்களை பார்த்து டோக்கியோ மக்கள் ரசிக்கின்றனர்.

# விண்வெளியில் ஈமச்சடங்கு! சீனாவில் "புக்கிங்" செய்யலாம்!!

(பீஜிங்)

'விண்வெளியில் ஈமச்சடங்கு செய்ய முடியுமா? ஏன் முடியாது'. இந்த வகையில் சீன நிறுவனம் ஒன்று மக்களுக்கு வித்தியாசமான விளம்பரத்தை அறிவித்துள்ளது.

இதைப் பார்த்து இதுவரை 50 பேர் தாங்கள் இறந்த பின்னர் தங்களுக்கு இறுதிச்சடங்கை விண்வெளியில் செய்ய வேண்டும் என்று உயிருடன் இருக்கும். போதே பதிவுசெய்துள்ளனர்.

சீனாவின் தலைநகர் பீஜிங்கில், 'சைனிஸ் டிசென்ட் ப்யூனரல்ஸ் சர்வீசஸ்' என்ற நிறுவனம் உள்ளது.

இது கடந்த பெப்ரவரி மாதம்தான் அமைக்கப்பட்டது.


இது சாதாரணமாக இயங்கும் இறுதிச் சடங்கு சேவைக்கான நிறுவனம் அல்ல. இப்போதுள்ள ஈமச்சடங்கு நிறுவனங்கள் ஈமச்சடங்கு செய்ய வான் தருவது, சாதனங்கள் தருவது போன்றவற்றை காசு வாங்கிச் செய்யும்.

ஆனால் இந்த சீன நிறுவனம் செய்யும் பணியே தனி. 'உங்கள் ஈமச்சடங்கை விண்வெளியில் வைக்கவேண்டுமா? அப்படியானால் இப்போதே பதிவு செய்யுங்கள்' என்று அறிவித்தது. இதைப் பார்த்த 50 சீனர்கள் பதிவு செய்து கொண்டனர்.

விண்வெளியில் ஈமச்சடங்கு என்றால் இங்கிருந்து ஆட்களை அனுப்பிச் செய்வர் என்று எல்லாம் கற்பனை பண்ணாதீர்கள். இறந்தவுடன் குடும்பத்தார் சாதாரணமாக செய்வது போல முறைப்படி அடக்கம் செய்துவிடுவர். ஆனால் இறந்தவருக்கு பிடித்தமான பொருளையோ, போட்டோவையோ, அவர் தலைமுடியையோ அவர் நினைவாக ஏதாவது ஒன்றை லிப்ஸ்டிக் சைசில் உள்ள பெட்டியில் போட்டுத் தர வேண்டும். அதை இந்நிறுவனம் புவி ஈர்ப்பு மண்டலத்தை தாண்டி அண்டவெளியில் விட்டுவிடும்.

இதற்காக ரொக்கெட்டை விட்டு இந்த இறந்தவர்களின் பொருட்களை போட்டு விடும். இதுதான் இறந்தவருக்கு ஈமச்சடங்கு செய்வதற்கு ஈடாகும் என்கிறது நிறுவனம்.

இந்தச் சேவைக்கு இலட்சக்கணக்கில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சீனர்களிடம் பெரிய அளவில் இது இன்னும் மவுசு பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த 'ஈமச்சடங்கு ரொக்கெட் சேவை' இன்னும் முறைப்படி ஆரம்பிக்கப்படவில்லை. (கு)



எந்த நேரமும் ரத்தக்கலரும், குண்டுவெடிச்சத்தமும் பார்த்து, கேட்டு அலுத்துப் போன ஈராக் குழந்தைகள் மனம் பாதிக்காமல் இருக்கவும், உள்ளம் குதூகலிக்கவும் குழந்தைகளுக்கான கலை திருவிழா பாக்தாத்தில் தொடங்கியது. முதல் நாள் தொடக்கவிழாவில் நடந்த கலைநிகழ்ச்சி.

# பிரேசிலில் விமான விபத்து 19 பேர் பலி

பிரேஸிலிய நகரான ரியோடி ஜெனிரோவிற்கருகில் விமானமொன்று மலைப் பிராந்தியத்தில் மோதி விபத்துக்குள்ளானது. இதில் 19பேர் கொல்லப்பட்டனர் என உள்ளூரதிகாரிகள் தெரிவித்தார்கள்.

மாஹே நகர விமானத் தளத்திலிருந்து புறப்பட்ட இந்த இரட்டை இயந்திர விமானம் 20 நிமிடங்களுக்குப் பின்னர் ராடர் திரையிலிருந்து காணாமற் போய்விட்டது என விமான நிலைய அதிகாரி யொருவர் குறிப்பிட்டார்.

இவ்விமானம் மலையில் மோதுண்டு வெடித்து தீர்பிழப்புகளாக விழுந்ததைத் தாம் கண்டதாக கிராமப்புற தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். வெட் எல் 410 என்னும் இவ்விமானம் செக் நாட்டில் தயாரிக்கப்பட்டது.விபத்து நிகழ்ந்த சமயத்தில் இதில் 17 பயணிகளும் இரு சிப்பந்திகளும் இருந்துள்ளனர்.

இவ்விபத்து நடந்து 10 மணித்தியாலயங்களுக்குப் பின்னரே விமானத்தின் சிதைவுகள் ஷருயாரிமா என்னுமிடத்துக்கருகில் கண்டுபிடிக்கப்பட்டனர். ரி யோடின் கிழக்கே 100கிலோ மீற்றர் தொலைவில் இந்த இடம் அமைந்துள்ளது. இவ்விபத்தில் ஒருவரும் உயிர் பிழைக்கவில்லை. அரசுக்குச் சொந்தமான எண் ணெய் நிறுவனமான பெட்ரோபிராஸின் சில ஊழியர்களும் இதில் பலியாகியுள்ளார்கள் என விமானச் சேவை இயக்குநர்டேவிட் பரிமாஸ் தெரி வித்தார். (கு-9)

# பிரான்ஸுடன் அணுசக்தி ஒப்பந்தம் செய்துகொள்ள பாகிஸ்தான் விருப்பம்

பிரான்ஸ் நாட்டுடன் அணுசக்தி ஒப்பந்தம் மேற்கொள்ள பாகிஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பிரான்ஸ் தூதுக்குவிடம் அந்நாட்டு வெளியுறவு துறை அமைச்சர் குறுஷித் கசூரி கோரிக்கை விடுத்துள்ளார். பிரான்ஸ் நாட்டின் வெளியு றவுத்துறை அமைச்சர் ஜீன்பிரான் கோய்ஸ் பொன்செட் தலைமையில் பாகிஸ்தான் சென்றுள்ள நான்கு பேர் அடங்கிய குழுவினர் பாகிஸ் தான் வெளியுறவுத்துறை அமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்து பேசுகையிலேயே மேற்படி விருப்பம் தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பின் போது பாகிஸ்தான் அமைச்சர் குர்ஷித் பேசுகையில், பாகிஸ்தான் விரைவான பொருளாதார வளர்ச்சியால் மின் சக்தியின் தேவை அதிகரித்துள்ளது எனவே எமது நாட்டின் அணுசக்தி துறையில் ஒத்துழைப்பு தரும் விடயத்தில் பிரான்ஸ் உட்பட அணு சக்தி விநியோகம் செய்யும் நாடுகள் பாகுபாடு காட்டக்கூடாது. தெற்கு ஆசிய பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு பாகிஸ்தான் முக்கிய ஆதாரமாகவுள்ளது.

இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானுடன் ஒருங்கிணைந்த பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். ஜீன் பிரான்ஸ் கோய்ஸ் பொன்செட் பேசுகையில் இப்பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்காக பாகிஸ்தான் சிறந்த முறையில் பங்காற்றி வருகிறது.

பிரான்ஸ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையேயுள்ள ஒத்துழைப்பு மற்றும் நம்பிக்கையை அதிகரிப்பதன் மூலம் மேற்கத்தேய நாடுகளையும், முஸ்லிம் நாடுகளையும் இணைக்கும் பாலமாக பாகிஸ் தான் விளங்கும் என்றார். (கு-7)

ஒருவன் ஒன்றை உண்மை என்று ஆராய்ந்து உறுதி செய்து விட்டால் அதைச் செய்து முடிக்கும் ஆற்றல் அவனுக்கு ஏற்பட்டுவிடும்.
-கெதே

# வலம்புரி

## ஜனாதிபதி மகிந்தவுக்கு மக்களின் ஆணை கிடைத்துள்ளது

ஜெனீவாவில் இடம்பெறவிருக்கும் அடுத்த கட்ட பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகள் பங்குபற்றுவதற்கு வசதியாக அவர்களுக்கான பயணப்பாதுகாப்பினை வழங்க அரசு முன்வந்திருப்பது பாராட்டுதற்குரியது.

ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் பங்கு பற்றுவதாயின் தமக்கான பயணப்பாதுகாப்பினை அரசு வழங்க வேண்டும் என புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கேட்டிருந்தார்.

இவ்வாறு அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கேட்டதற்கு சாதகமாக அரசு பதிலளித்திருப்பது சமாதானச் சூழ்நிலையை மேலும் வலுப்படுத்துவதாக அமையும்.

அதேநேரம் ஜெனீவாவில் நடந்த முதற்கட்ட பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட முடிபுகளுக்கு அமைவாக யுத்தநிறுத்த உடன்படிக்கையினை அமுல்படுத்துவது அரசின் தலையாய கடமையாகும். ஜே.வி.பியுடன் உடன்படிக்கை செய்திருந்த போதிலும் ஜனாதிபதி மகிந்தவின் சமாதான முயற்சி வெற்றி தரக்கூடிய அறிகுறிகளைக் கொண்டுள்ளது.

சமாதான முயற்சியில் நோர்வேயின் அனுசரணைப் பணியினை நிறுத்த வேண்டும் என ஜே.வி.பியும் ஜாதிக ஹெலஉறுமயவும் ஜனாதிபதி மகிந்தவிடம் கோரியிருந்தன.

எனினும் அக் கோரிக்கையினை கவனத்தில் எடுத்துக் கொள்ளாது சமாதான முயற்சியினை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நோர்வேக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அதுமட்டுமன்றி, யுத்தநிறுத்த உடன்படிக்கை குறித்தே முதலில் பேசவேண்டும். யுத்த நிறுத்த உடன்படிக்கையினை அமுல்படுத்துவது தொடர்பாக பேச்சு நடாத்தி அதில் இணக்கப்பாடு காண்பதன் ஊடாகவே சமாதானப் பேச்சுவார்த்தையினை முன்னெடுக்க முடி யும் என்பது விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு.

விடுதலைப்புலிகளின் நியாயபூர்வமான கருத்தை ஏற்றுக் கொண்ட மகிந்த, அதற்கு அமைவாக பேச்சுவார்த்தையினை நகர்த்தினார். இதற்குள் இருக்கக் கூடிய எதிர்ப்புக்கள், குழப்பங்கள் எதற்குமே அவர் இடம்கொடுக்க வில்லை.

வழமையில் விடுதலைப்புலிகள் கூறியதை எதிர்க்க வேண்டும் என்பதே அரசுத் தரப்புக் கொள்கையாக இருந்து வந்ததாயினும் அந்த வழமைக்கு மாறாக ஜனாதிபதி மகிந்த யதார்த்த பூர்வமாகச் சிந்தித்து முடிபினை எடுத்திருந்தார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையினை அமுல்படுத்துவது தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தக் கூடாது என்ற ஜே.வி.பி. மற்றும் ஹெலஉறுமய கூட்டமைப்பின் தடைகளுக்கு மத்தியிலும் ஜெனீவாப் பேச்சுவார்த்தையினை மகிந்த நடத்தியிருந்தார்.

இவ்வாறு தமது சிந்தனையில் அவர் செயற்பட்டதன் காரணமாகவே நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமோக வெற்றியினை தமதாக்கிக் கொண்டது.

தேர்தல் முடிபின் மறுபக்கத்தில் ஜனாதிபதி நடத்திய ஜெனீவாப் பேச்சுவார்த்தைக்கு அதாவது யுத்த நிறுத்த உடன்படிக்கையினை அமுல்படுத்துவதான பேச்சுக்களுக்கு தென்னிலங்கை மக்கள் பூரண ஆத ரவு வழங்கியுள்ளதுடன் தொடர்ந்தும் நோர்வேயின் அனுசரணை பணியுடன் சமாதானப் பேச்சு வார்த்தையினை முன்னெடுக்க - ஜே.வி.பி. , ஹெலஉறுமய போன்ற இனவாதிகளை தூக்கி எறிய மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.

எங்கே பார்க்கலாம்! ஜனாதிபதி மகிந்தவின் சமாதான முன்னெடுப்பை.

# தென்னிலங்கை அரசியலில் இந்தியா பாகிஸ்தான் நேரடித் தலையீடு

தென்னிலங்கையின் அரசியலில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகள் நேரடியாக தலையிடத் தொடங்கியுள்ளமை குறித்து அரசியல் நோக்கர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கை தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் சந்தித்ததைத் தொடர்ந்து தொண்டமானை இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் அழைத்துப்பேசினார்.

மரபுகளையும் மீறி இந்தியத் தூதுவரின் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார். இதையடுத்து மஹிந்தவின் அரசாங்கத்துக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவளிக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

இதேபோல் முஸ்லிம் காங்கிரஸ் விவகாரத்தில் பாகிஸ் தான் தூதரகம் தலையிட்டுள்ளது. அண்மையில் பாகிஸ்தான் தூதுவரை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் சந்தித்துப் பேசியுள்ளார்.

முஸ்லிம் காங்கிரசின் தலைமைத்துவம் தொடர்பான பிரச்சினையில் பிரதி அமைச்சர்களான ரிஷாத் பதியுதின், அமீர் அலி., எம்.நஜீப் ஆகியோரை மஹிந்த ராஜபக்ஷ ஆதரித்து வருகிறார். முஸ்லிம்காங்கிரஸ்தொடர்பானவழக்குகள் விலக்கிக் கொள்ளப்பட்டால் அரசாங்கத்தை ஆதரிப்பதாக பாகிஸ்தான் தூதுவரிடம் ரவூப் ஹக்கீம் உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பாக மஹிந்தவுடன் தான் பேச்சுக்கள் நடத்துவதாகவும் பாகிஸ்தான் தூதுவர் உறுதியளித்திருக்கிறார்.

இந்தியா, பாகிஸ்தான் தூதுவர்களின் இத்தகைய நேரடி அரசியல் தலையீடு இந்த நாட்டின் இறையாண்மைக்கு மிகவும் பாரதூரமானது என்று தென்னிலங்கை அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (கு)

# ஜனாதிபதியின் பாகிஸ்தான் விஜயத்தால் இலங்கைக்கு அதிக நன்மை கிடைத்துள்ளதாம்

## வர்த்தக அமைச்சு சுட்டிக்காட்டு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாகிஸ்தான் விஜயத்தால் இலங்கைக்கு அதிக நன்மைகள் கிடைத்திருப்பதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்தின் காரணமாக போக்குவரத்து சுற்றுலா கைத்தொழில் துறைகள் சார்ந்த அனுகூலங்களைப் பெற முடிந்ததாக அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.கே.ரத்நாய க்க கூறினார்.

தற்போது கொழும்புக்கும் கராச்சிக்கும் இடையில் வாரத்துக்கு மூன்று விமான சேவைகள் நடத்தப்படுகின்றன. இந்த சேவை வாரத்துக்கு ஏழாக அதிகரிக்கப்படும்.

இதேவேளை, இரண்டு நாடுகளுக்குமிடையில் கப்பல் சேவைகளை ஆரம்பிப்பதற்கும் இந்திய – பாகிஸ்தான் அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளார்கள்.

அத்துடன் 100 கோடி ரூபா செலவில் நிதியத்தை ஸ்தாபித்து பாகிஸ்தானுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்யும் இலங்கை வர்த்தகர்களுக்கு கடன்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானிலிருந்து துணிகளை இறக்குமதி செய்து அவற்றை ஆடைகளாக தைத்து மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கும் வழி பிறந்திருக்கிறது.

மேலும் ஜனாதிபதியின் பாகிஸ்தான் விஜயத்தின் போது பல கைத்தொழில்களை ஆரம்பிப்பது தொடர்பான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன என்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (க–7)

# மக்கள் மீது...

ஒப்பந்தம் நடைமுறைப்படுத்துதல் பற்றிய பேச்சுக்கள் மாத்திரமே பேசப்பட்டது. எனவே இதற்கு எந்தவித பாதிப்புக்களும் ஏற்படக் கூடாது என்பதற்காக பொங்கியெழும் தமிழீழ மக்கள் படையாகிய நாமும் தாக்குதல்களை நிறுத்தியிருந்தோம்.

ஆனாலும் இராணுவத்தினரின் மக்கள் மீதான தாக்குதல்களும் கைதுகளும் கெடுபிடிகளும் சுற்றிவளைப்புகளும் இன்றுவரை குறையவில்லை.

ஜெனீவாப் பேச்சுக்களில் சிறிலங்கா அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது போன்று ஒட்டுப்படைகளின் ஆயுதங்கள் இன்றுவரை களையப்படவும் இல்லை .அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவும் இல்லை.

மாறாக ஒட்டுப் படைகள் அரசினால் தீனிபோட்டப்பட்டு வளர்க்கப்பட்டு வருவதுடன் தமிழ் பேசும் மக்களிடையே பிளவினை ஏற்படுத்தும் நோக்குடன் ஜிகாத் என்னும் ஒட்டுப் படை உருவாக்கப்பட்டு அதற்கு முஸ்லிம் படை என்ற பெயரில் அங்கீகாரம் வழங்கப்படுகின்றது.

தமிழ் மாணவர்கள் மீது தொடர்ந்தும் ஆக்கிரமிப்புப் படைகள் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பிலும் திருமலையிலும் ஒட்டுப் படைகளுடன் இணைந்து தமிழீழ விடுதலைப்புலிகள் நிலைகள் மீதும் மக்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

திருகோணமலையில் கடற்கரையோர மக்கள் மீதும் தமிழீழ விடுதலைப்புலிகள் நிலைகள் மீதும் கடற்றொழிலாளர்கள் மீதும் தாக்குதல்கள் தொடர்கின்றன.

இராணுவத்திற்கெதிராக முறைப்பாடு செய்யும் மக்களை மிரட்டுதல்,

ஜனநாயகத்திற்கும், சட்டத்திற்கும் முரணாக முகங்களை கறுப்புத் துணிகளால் சுற்றி கட்டியபடி மக்கள் குடியிருப்புக்களில் இராணுவத்தினர் நடமாடுதல்.

இராணுவ ஆயுத தளபாடங்களை யாழ்.குடாநாட்டில் குவித்தல் என இராணுவத்தினரின் காட்டுமிராண்டித்தனமானது ஒப்பந்தத்திற்கு முரணாக இடம்பெற்று வருகின்றது.

இதனை சர்வதேச சமூகமும் யுத்தநிறுத்த கண்காணிப்பாளர்களும் நன்கு அறிந்த போதும் அவர்களாலும் எதனையும் செய்ய முடியவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளும் பொறுமையின் எல்லையில் நிற்கும் இச் சந்தர்ப்பதில் இனியும் எம்மால் பொறுக்க முடியாது. எனவே இனிவரும் நாட்களில் சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக தாக்குதல்களை மேற்கொள்ளவுள்ளோம்.

எனவே யாழ்.குடாநாட்டில் உள்ள அனைத்து உறவுகளும் பொங்கியெழும் மக்கள் படைகளுடன் இணைந்து எமது வீதிகள்தோறும் வீட்டு வாசல்கள் தோறும் கொலை வெறிபிடித்து அலையும் ஆக்கிரமிப்புப் படைகளுக்கெதிராக தாக்குதல்களை நடத்துவோம்.

'எதிரிப் படைகளை எம் தாய் மண்ணை விட்டு விரட்டுவோம் அனைவரின் கரங்களும் இணையட்டும்' என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ச)

# அரசின் உயர் அதிகாரிகள் குழு நாளை மறுதினம் இந்தியா பயணம்

(கொழும்பு)

அரசின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று நாளை மறுதினம் வியாழக்கிழமை இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எச்.எஸ்.பலிஹாக்கார பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ நிதியமைச்சின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர.



சமாதான செயலகப் பணிப்பாளர் ஜோன் குணவர்த்தன ஆகியோரே இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இரு நாள் பயணமாக இந்தியாவுக்கு செல்லும் இக் குழு வினர் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, எதிர்கட்சித் தலைவர் அத்வானி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்த நிறுத்த உடன்படிக்கை குறித்த பேச்சுக்கள் தொடர்பாகவும் வடக்கு–கிழக்கு பகுதிகளின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகவும் இக் குழு விளக்கி கூறவுள்ளதாக தெரியவருகின்றது.

அதேவேளை, சமாதான செயலகப் பணிப்பாளர் ஜோன் குணவர்த்தன கடந்த சனிக்கிழமை கொழும்பிலிலுள்ள இந்திய தூதுவர் நிருபமா ராவை சந்தித்து கலந்துரையாடியுள்ளதாகவும் தெரியவருகின்றது. (கு)

**சுன்னாகம் பதி தாழையடி பூரணை புட்கலை சமேத ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார் பெருமானின் மஹோற்சவ பாடல்கள்**



**நான்காம் திருவிழா**

இராகம்-ரஞ்சனி தாளம் -ஆதி

பல்லவி

உனைமற வாதிருக்க வரமருள்வாய் ஐயப்பா
ஓங்கி உலகளந்த ஐயனே என்றும் –உனை

அனுபல்லவி

கனவிலும் நனவிலும் உனது சரணகோசத்தை
கன்னல் தமிழ்மொழியால் கானம் சொல்லித்துதிக்க –உனை

சரணம்

முன்னைப் பழம் பொருட்கும் முன்னம் நிறைந்த ஆதி
மூலப் பொருளே மன மோகினி பாலனே
மருது நெல்வயல் சூழப்பெறும் சுன்னை நகர்
தன்னில் பூரணையும் புட்கலையும்சேர்ந்துறையும்–உனை

ஆக்கம்-ஐயப்ப அடியவர்

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



**வியாபாரிகள் இருப்புத் திட்டம் பார்ப்பது போல் நம்மிடத்தில் என்ன என்ன நல்ல குணங் கள் இருக்கின்றன என்றும் எவ்வளவு தூரம் ஆன்மீகத்தில் முன்னேறியிருக்கிறோம் என்றும் சோதித்துப் பார்.**

சுவாமி விவேகானந்தர்

## கமத்தொழில் இடாப்பு தயாரிக்கும் பணிகள்

மீசாலை, கைதடி ஆகிய இடங்களைச் சேர்ந்த கமநல சேவை நிலையங்களில் கமத் தொழில் இடாப்பு தயாரிக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனவே வயல் உரிமையாளர்கள் தமது பகுதி விவசாய சம்மேளனத்துடன் தொடர்பு கொண்டு தமது விண்ணப்பங்களை கம நல சேவைகள் நிலையத்தில் ஒப்படைக்குமாறு பெரும்பாக அலுவலர் அறிவித்துள்ளார். (க-108)


### இலங்கை மின்சார சபையின் வடமாகாண மின்பாவனையாளருக்கான பணிவான வேண்டுகோள்

தற்போது நீங்கள் அனுபவிக்கும் மின்வெட்டை பின்வரும் நடைமுறையைக் கடைப்பிடிப்பதால் தவிர்க்க முடியும்.

01.மாலை 7 மணி முதல் மாலை 9 மணி வரையிலான மின்பாவனையை மட்டுப்படுத்துதல்.

02.இவ் வேளையில் அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனைய தேவை களுக்காகப் பாவிக்கும் மின்குமிழ்களில் ஆகக் குறைந்தது இரண்டையேனும் நிறுத்தி வைத்தல்.

03.மின் சக்தி மூலம் சமையல், நீர் இறைத்தல், ஒட்டு வேலைகள் செய்தல் போன்றவற்றை இத்தருணத்தில் தவிர்த்தல்.

இவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் தொடர்ந்தும் 24 மணி நேரமும் தடையின்றி உங்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கான மின்சாரம் பெற்றுக் கொள்வதை உங்களாலேயே உறுதி செய்ய முடியும்.

மேற்கூறிய நடைமுறைகளை தாங்கள் கடைப்பிடிக்கத் தவறின் மாலை 7 மணி முதல் மாலை 9 மணி வரையிலான நேரத்தில் மின்வெட்டை அமுல் நடத்துவது தவிர்க்க முடியாததொன்றாகிவிடும் என்பதை மிக மன வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்.

எனவே சகலரினதும் நன்மை கருதி எங்களுடன் ஒத்துழைக்குமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகிறோம்.

இலங்கை மின்சார சபை,
யாழ்ப்பாணம்,
2006.04.03.

பிரதிப் பொதுமுகாமையாளர்
(வட மாகாணம்)

(ே-அ-283)


## ஐ.தே.கவின் தலைமையிலிருந்து ரணில் விலகிக் கொள்ள வேண்டும்

### மகிந்த விஜயசேகர எம்.பி. வேண்டுகோள்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க விலக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த விஜய சேகர தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கவின் செயற்குழு மற்றும் மாத்தறை மாவட்ட தலைமைப் பதவியிலிருந்து தன்னை நீக்கியது ரணிலின் ஏகாதிபத்தியத்தைக் காட்டுகின்றது என்றார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியை உடைத்துக்கொண்டு வந்து ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் அமர்த்துவதற்கு வழங்கிய ஒத்துழைப்பிற்கு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் வழங்கிய பரிசே இது. ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிபெறச் செய்வதே எனது பிரதான நோக்கம். ரணில் விக்கிரமசிங்க தலைவர் என்றவகையில் எவருக்கும் செவிசாய்க்காத தனது பரம்பரையை காப்பாற்ற முயலும் தன்னைச் சுற்றியிருக்கும் சிலர் தெரிவிக்கும் கருத்துக்களை மட்டுமே கேட்கும் ஒருவர் என விஜய சேகர தெரிவித்தார். (ச)

## பாராளுமன்ற...

மீதான வன்முறைகளை உடனடியாக நிறுத்தக்கோரியும் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் பாராளுமன்றத் தொடரை கடந்த இரு மாதங்களாக பகிஷ்கரித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இலங்கை வந்த...

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஜெனீவாவில் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ள இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கான ஏற்பாடுகள் குறித்தே இவர் தனது சந்திப்புக்களின்போது கலந்துரையாடுவார் என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று கொழும்பை வந்தடைந்த ஜோன் ஹான்ஸன் பௌவர், அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜோன் குணரட்ண, அரசபேச்சுக்குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோரைச் சந்தித்து சமாதான முயற்சிகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

நேற்று மாலை புதிய கண்காணிப்புக் குழுத் தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இன்று பல்வேறு கட்சிகளினதும் அரசியல் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடாத்தும் அவர் நாளை கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதேவேளை நாளை மறுதினம் ஒரு நாள் விஜயம் மேற்கொண்டு கொழும்பு வரும் நோர்வே அபிவிருத்தியமைச்சரும் சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்மை சந்தித்து பல்வேறு தரப்பினருடனுமான சந்திப்புக்கள் குறித்து விளக்குவார்.

அன்றே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இருவரும் சந்தித்துப் பேசவுள்ளனர். (ச-4)

## இலவச உலர் உணவு நிவாரணம் 7ஆம் திகதி முதல் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

புது வருடப்பிறப்பையொட்டி ஏப்ரல் மாத இலவச உலர் உணவு நிவாரண விநியோகம் யாழ். மாவட்ட ப. நோ.கூ.சங்கங்களில் எதிர்வரும் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதற்கேற்ற வகையில் யாழ். மாவட்ட ப. நோ.கூ சங்கங்கள் தமக்குரிய வழங்கற் கட்டளைகளை நாளை புதன்கிழமை அலுவலக நேரத்தில் பெற்று நிவாரண விநியோகத்தை உரிய திகதியில் ஆரம்பிக்க அனைத்து முன்னேற்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் ம. பிரதீபன் அறிவித்துள்ளார். (க)


நந்தா,
தேஜா ஸ்ரீ .
மற்றும்
பலர் நடித்த
01.04.2006 முதல்
கோடம்பாக்கம்
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

விஷால்,
மீராஜாஸ்மின்
நடிக்க
சண்டக்கோழி
சங்கானை கா.நே. 11.00, 2.45,6.00,(பு.நே)